# செழிப்பின் விதிகள்

## அஸ்திபார சத்தியம் தொகுப்பு 5

### பீட்டர் டான்

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10. விலை கொடுத்த இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.comக்கு அனுப்புங்கள்.
வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:


Peter Tan Evangelism
PO Box 27
Belconnen
ACT 2616, Australia.

Tel.: 00614 17755613
Email: elshaddai1@bigpond.com


*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# முகவுரை

வெறும் பொருளாதரா செழிப்பைவிட அதிகமாக உள்ளடக்கியதுதான் செழிப்பு என்ற வார்த்தையாகும். எப்போதுமே பொருளாதார செழிப்புக்கு முன்னதாக வரவேண்டியது ஆவிக்குரிய மற்றும் ஆத்தும செழிப்பாகும் (3 யோவா. 2). பணத்தை கையாளும் திறமை என்பது கிறிஸ்தவ அஸ்திபார வாழ்வின் முக்கிய பகுதியாகும் (மத். 6:24). பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராக இருக்குமானால், பணத்தை பற்றிய நமது மனப்பான்மையும், பணத்தை கையாளுவதில் வளரும் நமது திறமைகளும், தீமையின்மேல் ஆதிக்கம் செலுத்தும் நன்மையை செயல்முறையாக்கிக் காட்டும் என்பது வெளிப்படையானதே (1 தீமோ. 6:10).

அஸ்திபார தொடர் தொகுப்பு 5ல் உள்ள போதனைகள், பணத்திற்கும் செழிப்புக்கும் உள்ள கிறிஸ்தவ அணுகுமுறையின் முன்னுரை மட்டுமேயாகும். இது பற்றிய அதிகமான போதனைகள் 'கிருபையினால் செழிப்பு' என்ற புத்தகத்தில் அடங்கியுள்ளன. ஆனால், இப்புத்தகம் செழிப்பின் அடிப்படை விதிகளை மட்டும் விளக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. நமது நவீன திருச்சபையில் அளவுக்கு அதிகமாக பொருளாதார செழிப்பு வலியுறுத்தப்படுவது வருத்தத்திற்குரியதே. எனினும் செழிப்பின் வேதாகம அடிப்படை கொள்கைகளை விவரிப்பது என்பது முக்கியமானதே.

ஆண்டவராகிய இயேசுவை உங்களது பணக்காரியங்களில் மெய்யாகவே ஆண்டவராக்க ஆரம்பிக்கும்போது, உபாகமம் 28:1–14ன் ஆசீர்வாதங்கள் உங்கள் மேலிருப்பதாக.

பாஸ்டர் ***பீட்டர் டான்***

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

# அத்தியாயம் 1
# செழிப்பில் தேவசித்தம்

தேவ ஜனங்களுக்கு தேவனது பரிபூரண திட்டமாகவே, எப்பொழுதும் செழிப்பு இருந்து வந்துள்ளது. ஏதேன் தோட்டத்தில் தேவன் அருளினவைகளைப் பார்க்கும்போது, முழு மனுக் குலத்திற்கும் உள்ள அவரது பரிபூரண திட்டம் அடையாளமாக வெளிப்படுகிறது. ஆதாமினுடைய எல்லா தேவைகளையும் சந்திக்கக்கூடிய அளவிற்கு அபரிமிதமாக தேவன் அள்ளிக்கொடுத்தார் (ஆதி. 1:29). ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுந்த பிறகுதான் வறுமை ஆரம்பமானது. அதுமுதல் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் உள்ள குறைவையும் வறுமையையும் மனுக்குலம் அனுபவித்து வருகிறது.

### *இயேசுவின் செழிப்பு*

இயேசு இந்த உலகத்திலிருந்தபொழுது, பாரம்பரியங்கள் போதித்ததற்கு மாறாக அவர் செழிப்புள்ளவராகவே இருந்தார். எனினும் தனது சுயநல உபயோகத்திற்காக செழிப்பை சேர்த்து வைக்கவில்லை. எளிமையான முன்னணையில் இயேசு பிறந்தார். ஆனால் பொன், வெள்ளைப்போளம், தூபவர்க்கம் ஆகியவைகளை கொண்டுவந்த இராஜாக்கள் அவரை சந்தித்தார்கள். தங்களது பொருட்களினால் அவருக்கு ஊழியம் செய்த பணக்கார பெண்மணிகள், அவரது இவ்வுலக ஊழியத்தை ஆதரித்தார்கள் (லூக். 8:1–3). படகுகளும், வீடுகளும், விருந்தினர் அறைகளும், கழுதைகளும் அவரது கையசைவிலிருந்தன (லூக். 5:1–3; மாற். 14:12–16; 11:1–7). அவரது சரீரம் ஒரு பணக்கார மனிதனின் கல்லறையில் வைக்கப்பட்டது (மாற். 15:42–46). இயேசுவுக்கு ஒரு பொருளாளர் கூட இருந்தார். இயேசு ஏழைகளை தவறாமல் ஆதரித்ததும் வெளிப்படையானதே (யோவா. 12:4–8). நாம் ஐஸ்வரியவான்களாயிருப்பதற்கு இயேசு எதிரானவரல்ல. அவர் பொருளாசைக்கே எதிராய் இருக்கிறார். நமது பாவங்களுக்காகவும், வியாதிகளுக்காகவும், வறுமைக்காகவும் மரிக்க, நமக்காக வறுமை என்னும் சாபத்தை எடுத்துக்கொண்டபொழுதுமட்டும்தான் இயேசு ஏழையானார் (கலா. 3:13). அவர் அணிந்திருந்த அங்கியைகூட, அவரது மரண தண்டனையை செயல்முறைப்படுத்திய போர்ச்சேவகர்கள், சீட்டுப்போட்டு எடுத்துக் கொண்டார்கள் (யோவா. 19:23–24).

அவர் ஐஸ்வரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐஸ்வரிய வான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே என்று பவுல் கொரிந்தியருக்கு ஞாபகப்படுத்தினார் (2 கொரி. 8:9). பொருளாதார ஆசீர்வாதங்களின் சூழ்நிலையில் இந்த வேதப்பகுதி எழுதப்பட்டுள்ளது. மக்கெதோனியா நாட்டு சபையார் கொடுத்த பொருளாதார உதவியை குறித்து பவுல் சொன்னார் (2 கொரி. 8:1–7). அவரது பாவநிவாரண கிருபையின் மூலமாக நம்மை செழிப்புள்ளவர்களாக்குவதற்காக, இயேசு பொருளாதார வறுமையின் சாபத்தை தன்மேல் எடுத்துக்கொண்டார்; நாம் சுயநலவாதிகளாக இல்லாமல், ஒவ்வொரு நற்கிரியைகளிலும் நாம் அபரிமிதமாய் இருப்பதே அதன் நோக்கமாகும் (2 கொரி. 9:8).

### *வறுமையின் காரணங்கள்*

செழிப்பின் விதிகளை மட்டும் கைக்கொண்டு, வறுமைக்கு கதவை மூடிவைக்காமல் பொருளாதார செழிப்புக்கு பாடுபடும் யாரானாலும், அவர்கள் தங்களையே வஞ்சித்துக் கொள்கிறார்கள். அது செயல்படாது. நமது வறுமைக்கு ஜென்ம பாவத்தின்மேல் பழி சுமத்தவும் கூடாது. வறுமையின் காரணங்களை நீதிமொழிகள் தெளிவாக விளக்குகிறது.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

வறுமைக்கு ஐந்து காரணங்கள் உள்ளன:

1. எந்த விதிகளையும் கொள்கைகளையும் மீறினாலும் பரவாயில்லை என்று ஐசுவரியங்களை தேடும் ஒரு பொல்லாத கண். வறுமையே அதன் கடைசி விளைவாகும் (நீதி. 28:22).
2. தேவ கரம் தங்களை ஆசீர்வதிப்பதை அங்கீகரியாமலும், மற்றவர்களோடு தங்கள் ஆசீர்வாதத்தை பகிர்ந்துகொள்ளமலும் இருக்கிற ஒரு சுயநல சுபாவம் (நீதி. 11:24).
3. சோம்பல் சுபாவம் வறுமையை வரவேற்கும். கடின உழைப்பை விரும்பாமல், 'வாக்குத் தத்தங்களை உரிமை கொண்டாடுவதன்' மூலம் செழிப்பை பெற்றுக்கொள்ள முயற்சிப் பவர்கள், பட்டினியினால் மரித்துப் போகலாம் (நீதி. 6:9–11; 20:13; 24:30–34).
4. மற்றவர்களுடைய ஞானத்தினாலும் தவறுகளினாலும், பாடம் படிக்க மறுக்கும் கற்றுக் கொள்ள விருப்பமில்லாத மனப்பான்மை. இப்படிப்பட்டவர்கள், தங்களுடைய சொந்த அழிவுக்கு நேராய், மற்றவர்கள் செய்த தவறுகளை தாங்களே மறுபடியும் செய்வார்கள் (நீதி. 13:18).
5. உலக இன்பங்களையும் சுகபோகத்தையும் நாடும் அவசர குணமும் மேலோட்டமுமான மனப்பான்மை. இது செல்வத்தை வெளிப்படையாக தவறுதலாகப் பயன்படுத்துவதாகும். கொஞ்சத்திலோ அதிகத்திலோ, தேவன் நம்மை ஆசீர்வதித்த செல்வத்தின் நல்ல உக்கிராணக்காரராயிருக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும் (நீதி. 28:19, 20; 23:21).
6. மறைவான பாவங்கள் அதிக வறுமைக்கு வழிநடத்தும். ஜனங்கள் பாவத்திலிருந்து சில காலங்கள் தப்பித்துக் கொண்டதாக காணப்பட்டாலும், கடைசியில் நியாயத்தீர்ப்பினால் வறுமை அவர்களை மேற்கொள்கிறது (நீதி. 28:13).

### *செழிப்புக்கு தவறான வழிமுறைகள்*

தனது ஜனங்கள் செழிப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதே தேவ சித்தமாகும். எனினும், சட்டவிரோதமாகவும் வேதத்திற்கு மாறான முறைகளிலும் செழிப்பு, என்று அர்த்தமாகாது. லாட்டரி சீட்டுகளை சிலர் வாங்கி, ஒரு நாளில் பணக்காரராகிவிடுவோம் என்று நம்பி, அவைகளை தங்கள் வேதாகமத்தில் வைத்துக்கொள்கின்றனர். மற்றவர்கள் சூதாட்டத்தில் சரியான எண்ணை குறிப்பிடவும், குதிரைப் பந்தயத்தில் சரியான குதிரையை குறிப்பிடவும், 'ஞானத்தைப் போதிக்கும் வசனத்தை' பெற்றுக்கொள்ளவும் எப்பொழுதும் நம்பிக்கையோடிருக்கின்றனர்.

அப்படிப்பட்ட திடீர் ஐஸ்வரியங்கள் வழக்கமானபடி அழிவுக்கேதுவானதே. ஆரம்பத்திலே துரிதமாகக் கிடைத்த சுதந்தரம் முடிவிலே ஆசீர்வாதம் பெறாது (நீதி. 20:21). செல்வத்தை சேர்ப்பதற்கு சம்மந்தப்பட்ட ஞானமும் கடின உழைப்பும், அந்த செல்வத்தை விவேகமாய் செலவுசெய்யவும் அவசியமாகிறது. மூடன் செல்வத்தை விரயமாய் செலவழித்து, தன்னையே அழித்துக்கொள்வதில் முடிவடைகிறான் (நீதி. 21:20). ஐஸ்வரியவானாகிறதற்கு தீவிரிக்கிறவனோ தண்டனைக்கு தப்பான் (நீதி. 28:20).

'வேகமாக – பணக்காரராகும் – திட்டயோசனை' என்று ஒன்றுமில்லை. அப்படிப்பட்ட திட்டயோசனைகளெல்லாம் வேதவாக்கியங்களுக்கு ஒவ்வாததும், வழக்கத்தின்படியே சட்ட விரோதமானவைகளுமாகும். இந்தப் புத்தகத்தில் சுருக்கமாய் வர்ணிக்கப்பட்ட செழிப்பின் விதிகள், பணக்காரராவதற்கு திடீர் சிறு திட்டயோசனைகளல்ல. அதுதான் உங்கள் மனப்பான்மை என்றால், அது செயல்படாது. செழிப்பின் விதிகள் என்பது, நல்லொழுக்கத் தையும் ஜாக்கிரதையையும் எதிர் நோக்கும் வாழ்வை மாற்றும் கொள்கைகளாகும். அது வெற்றிகரமாக நடைபெற அவைகள் குணத்திலும், சன்மார்க்கத்திலும், வாழ்க்கை முறையிலும் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கிறது. கொஞ்சத்தில் உண்மையாயிருக்கிறவர்கள் அநேகத்திலும் உண்மையாயிருப்பார்கள் (லூக். 16:10).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

### *வேதத்திலுள்ள செழிப்படைந்த மனிதர்கள்*

செழிப்பாயிருப்பதென்பது ஆவிக்குரியவர்களாயிருபதற்கு முரண்பட்டதல்ல. வேதத்திலுள்ள அநேக ஆவிக்குரிய மனிதர்கள் செழிப்பாயிருந்தார்கள். ஆபிராம் மிருக ஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானுமாயிருந்தான் (ஆதி. 13:2). யோசேப்பு பிரதம மந்திரியாயும் பார்வோனுக்கு வேண்டிய மிக முக்கிய மனதனாகவும் இருந்தான் (யோபு 1:3). மூன்று சாம்ராஜ்யங்களிலும் தானியேல் மிக முக்கியமானவனாய் இருந்தான் (தானி. 23:48; 6:1, 2; 10:1). அப்போஸ்தலனாகிய பர்னபாஸ் ஐஸ்வரியவானும் அதிக நிலங்களை உடையவனுமாயிருந்தான் (அப். 4:36, 37).

இந்த மனிதர்களுடைய வாழ்வின் வெற்றியும் செழிப்பும், தேவனுக்கும் தேவனுடைய கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்ததிலேயே எப்போதும் இருந்துள்ளது. பாவஞ்செய்ய யோசேப்பிற்கு வாய்ப்பு இருந்தது. ஆனால், அவன் சன்மார்க்க நேர்மையை தெரிந்தெடுத்தான் (ஆதி. 39:9). வெற்றியும் செழிப்பும் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை தியானிப்பதில் யோசுவா உண்மையாயிருப்பதை சார்ந்தே உள்ளது என்று யோசுவாவிற்கு சொல்லப்பட்டது (யோசு. 1:8). சாலமோன் இராஜாவின் ஐஸ்வரியங்கள், அவர் வாழ்வில் இருந்த தேவ ஆசீர்வாதத்தின் நேரடி விளைவுகளாகவே இருந்தன (1 இரா. 3:13).

தனது விபசாரத்திற்காக தாவீது இராஜா கடிந்து கொள்ளப்பட்டு சீர்திருத்தப்பட்டபோது, தாவீதின் செழிப்பு தேவனிடமிருந்தே வந்ததாக தேவன் குறிப்பிடுகிறார் (2 சாமு. 12:7, 8). சுவாரஸ்யமான கவனிக்க வேண்டிய குறிப்பு என்னவென்றால், தாவீதுக்கு இருந்த செழிப்பு குறைவாக இருந்திருந்தால், அவனுக்கு இன்னும் அதிகமாக கொடுப்பதாகவும் தேவன் சொன்னார்! (2 சாமு. 12:8). தேவனால் எவ்வளவு கொடுக்க முடியும் என்பதல்ல, ஆனால் நாம் எந்த அளவுக்கு தேவனை விசுவாசிக்க முடியும் என்பதுதான் விஷயம். தேவ ஆசீர்வாதங்கள் தேவனால் மட்டுப்படுத்தப்படுவதல்ல; ஆனால், அவைகள் தேவன்மேல் நாம் வைக்கும் விசுவாசத்தினால் மட்டுப்படுத்தப்படுகின்றன! நம்மை செழிக்கச் செய்வதுதான் தேவசித்தம் என்று நாம் காணும் வரையில், நமது உடன்படிக்கை உரிமையையும் சிலாக்கியத்தையும் நாம் பெற்றுக்கொள்ள முடியாது. செழிப்பு தங்களுடைய வாழ்க்கைக்கு தேவ சித்தம்தான் என்று காணாததால், உண்மையான கிறிஸ்தவ மக்கள் கூட செழிப்பின் ஆசீர்வாதங்களை காணாமலேயே வாழ்ந்து மரித்துவிட்டார்கள். அவர்கள் கேட்காததினால் அவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை (யாக். 4:2). மற்றவர்கள், தங்களுடைய இன்பங்களுக்காக செலவழிக்க வேண்டுமென்று கேட்பதினால் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள் (யாக். 4:3).

### *உக்கிராணத்துவத்தின் சுவிசேஷம்*

கிறிஸ்தவர்கள் செழிப்பாயிருப்பது தேவ சித்தம்தான் என்று பிரசங்கித்தவர்களை, சில கிறிஸ்தவர்கள் 'செழிப்பின் தவறான பக்திமார்க்கத்தாராக' களங்கப்படுத்திவிட்டார்கள். முதலாவதாக, இயேசுகிறிஸ்துவினுடைய பாவநிவிர்த்தியின் மூலமாக இரட்சிப்பை விசுவாசிக்கிற எந்த கிறிஸ்தவனையும் 'தவறான பக்திமார்க்கத்தாராக' மற்றுமொரு விசுவாசி அழைப்பது சரியானதல்லவென்று நான் நினைக்கிறேன். இயேசுகிறிஸ்துவின் தெய்வீகத் தையும், மனுஷீகத்தையும் அவரது பாவநிவிர்த்தி வேலையையும் முழுவதுமாக மறுக்கிறவர் களையும், உபதேசத்திற்கும் நடைமுறைவாழ்க்கைக்கும் ஒரே அதிகாரமாக வேதாகமம்தான் தேவ வார்த்தை என்பதை மறுக்கிறவர்களையும் குறிக்கத்தான், 'தவறான பக்திமார்க்கத்தார்' என்று இந்த வார்த்தை பயன்படுத்தப்பட வேண்டும்.

செழிப்பை தவறாக பயன்படுத்துவதினாலும், பொதுக்கூட்ட நேரங்களில் பணத்தைப் பற்றிய ஆரோக்கியமற்ற வற்புறுத்தல்களாலும் சில குறைகள் எழுந்துள்ளன. கிறிஸ்தவர்கள் செழிப்படையவும், தங்களுடைய தேவைகளுக்கு போதுமானதை பெற்றுக்கொள்வதோடு, தேவனுடைய வேலையை தாங்குவதற்கு தேவைக்கு அதிகமாக பெற்றுக்கொள்வதின்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

அவசியத்தையும் புறக்கணித்து, செழிப்பின் உபதேசத்தை எதிர்க்கிறவர்கள், தங்கள் சிந்தனையில் எதிர்ப்புறமாக மிகவும் அதிகமாக சாய்ந்துவிடுகிறார்கள்.

கிறிஸ்தவர்களுக்கு செழிப்பை போதிக்காததினால், இந்த உபதேசத்தை எதிர்க்கிறவர்கள் தங்களுடைய சபையிலும் ஊழியங்களிலும் பணத்தேவைகளை அனுபவிக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பணத்தேவைகளிலே, லாட்டரிகள் மற்றும் உலக செயல்பாடுகளான வேதத்திற்கு ஒவ்வாத உலக வழிமுறைகளில் நிதி திரட்டுவதை கடைசியாக பின்பற்றுகிறார்கள். தனது மிஷனரிப் பயணத்திற்காக அப்போஸ்தலனாகிய பவுல் லாட்டரி சீட்டு குலுக்கலை நடத்துவதை நீங்கள் கற்பனை செய்ய முடியுமா?

செழிப்படைவது தேவ சித்தம்தான் என்றும், அதே நேரத்தில் பணத்தின் நல்ல உக்கிராணக் காரர்களாய் இருப்பதன் முக்கியத்துவத்தையும் கிறிஸ்தவர்களுக்கு போதிப்பதுதான் சரியான சமச்சீர் நிலையாகும். பணத்தை உபயோகிப்பதில் உண்மையாய் இருக்க கற்றுக்கொள்ளும் அதே நேரத்தில், கிறிஸ்தவர்கள் அதிக செழிப்படைய, விசுவாச பயிற்சிக்காக தைரியமாய் இருக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். சுவிசேஷம் என்பது செழிப்பின் மற்றும் உக்கிராணத் துவத்தின் சுவிசேஷமாகும்.

### *பொருளாதரத்தில் சமச்சீர் நிலையிலிருப்பது*

சிக்கனமில்லாதிருப்பது செழிப்பின் அர்த்தமாகாது. செழிப்பிலே, நாம் செலவழிப்பதில் இருந்து மிகவும் அதிகமானதைப் பெற்றுக்கொள்ள இன்னும் நாடவேண்டும். செழிப்பு என்பது வீணாக்குவதாகாது. வீணாக்குவதில் இயேசுவுக்கு நம்பிக்கையில்லை என்பது தெளிவானதே. அவருடைய ஐந்தப்பம் இரண்டு மீன்கள் அற்புதத்தில், பன்னிரண்டு கூடைகள் நிறைய துணிக்கைகள் சேகரிக்கப்பட்டதிலிருந்து இந்தக் கூற்றை நாம் காண்கிறோம் (மத். 14:20).

அதேநேரத்தில் கொஞ்ச பணத்தில் கவனமாயிருந்து, பெருந்தொகையில் ஏமாந்தவர் களையும் நான் பார்த்திருக்கிறேன். மிகவும் தாழ்ந்த தரமுள்ள மலிவான பொருட்களை வாங்க அவர்கள் சிக்கனமாயிருக்கிறார்கள். அநேகமுறை அவைகளை சீர்செய்வதற்காக அதிகமாக செலவு செய்வதில் வந்தடைகின்றனர். நாம் சிக்கனமாயிருந்து மிகக் குறைந்த விலையில் தரமுள்ளவைகளை வாங்க வேண்டும்.

இது சம்மந்தமாக, மற்றவர்களுடைய செலவழிக்கும் பழக்கத்தை விமர்சிக்கும் எவருக்கும் எதிராக எச்சரிப்புக்கொடுப்பேன். முதலாவது உங்களையே நியாயந்தீர்த்துக் கொள்ளுங்கள். அநேக குடும்பங்கள் சில காரியங்களில் சிக்கனமாயிருக்கும் அதே வேலையில், மற்ற காரியங்களில் மிகவும் தாராளமாய் செலவு செய்வார்கள். ஒரு காரியத்தில் ஒரு குடும்பம் சிக்கனமாயிருந்து, அதேகாரியத்தில் இன்னொரு குடும்பம் தாராளமாய் செலவு செய்கையில் பிரச்சனை உருவாகிறது. முதலாவது குடும்பம் இரண்டாவது குடும்பத்தை வீண் செலவு செய்வதாக விமர்சிக்க நேரிடுகிறது. இரண்டாவது குடும்பமும் முதலாவது குடும்பத்தை சில காரியங்களில் வீண் செலவு செய்வதாக கருதக்கூடும். மேலும், ஒரு குடும்பம் வரவுக் கேற்ப செலவு செய்து தங்கள் செழிப்பின் அளவில் வாழ்ந்தால், யாரும் அவரை சீக்கிரமாக நியாயந்தீர்க்கக் கூடாது. மற்றவர்களுக்கு தாராளமாய் கொடுக்கும் தங்கள் திறமையை சமரசம் செய்யாமல், தாங்கள் கடினமாய் உழைத்ததினால் வந்த சில சொகுசான காரியங்களை அவர்கள் அனுபவிக்க இயலுமெனில், அவர்களை சீக்கிரத்தில் நியாயந்தீர்க்க யாரும் முற்படக்கூடாது.

ஒரு குடும்பம் எல்லாக் காரியங்களிலும் மிதமிஞ்சி செலவு செய்ய ஆரம்பிக்கும்போதும், அல்லது பண ஆசையும் உலகப் பொருட்களும் அவர்களுடைய இருதயத்தை கவ்விப் பிடித்துக்கொள்ளும்போதும், வீண்டிப்பதின் அபாயம் வருகிறது. பொருளாதாரத்தில் சமச்சீரான குடும்பத்தின் நிரூபணம், அவர்களுக்கு எவ்வளவு இருக்கிறதென்பதைப்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

பொறுத்தல்ல. மாறாக மற்றவர்களுக்கு அவர்கள் எவ்வளவு தாராளமாயிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்ததே. உதாரகுணம் என்பது, உலகப்பொருட்களிலிருந்து விலகுவதையும், பகிர்ந்துகொள்ள சுயநலமற்ற ஒரு ஆசையையும் தெரிவிக்கிறது.

### *ஒரு ஊழியக்காரரின் வாழ்க்கை முறை*

ஊழியத்திற்கென்று ஒரு நபர் தேவ அழைப்பிற்கு கீழ்ப்படியும்பொழுது, மற்றவர்கள் பின்பற்றக்கூடிய மிகச் சிறந்த வாழ்க்கை முறையையே அவர் வாழ தேர்வு செய்திருக்கிறார் என்று தனிப்பட்ட முறையில் நான் கருதுகிறேன். அவரது பொது மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை முறை கிறிஸ்துவை குறிக்கும் முன் உதாரணமாக ஒரு கண்ணாடி வீட்டில் வாழவே அவர் தேர்வு செய்திருக்கிறார். அவருடைய தேவைகளை தேவன் சந்திக்கவில்லை என்றோ அல்லது அவருடைய ஊழியக்காரர்கள்மேல் அவர் அக்கறை கொள்ளவில்லை என்றோ ஜனங்கள் சொல்லும் அளவிற்கு அவர் ஏழையாக இருக்கக் கூடாது. அல்லது அவரது இருதயத்தில் நித்தியமே இல்லை என்று ஜனங்கள் சொல்லக் கூடிய அளவிற்கு மிகப் பெரிய சொகுசான வாழ்வும் வாழக் கூடாது. ஊழியத்தின் வருமானம் 100% ஊழியத்திலிருந்தே வரும்பொழுதுதான் அது அவ்வாறாக கருதப்படும். தாங்கள் கொடுத்த பணம் எவ்வளவு ஞானமாய் செலவு செய்யப்படுகிறதென்ற வரவு செலவை ஜனங்கள் அறிய விரும்புகின்றனர். எனினும், தங்களது ஊழியத்திற்கு அப்பாற்பட்ட ஆதாரத்திலிருந்து ஊழியக்காரரது வருமானம் வருமென்றால், அதன் பயன்பாட்டை தீர்மானிப்பது அவரது சொந்த விஷயம்தான்.

தனிப்பட்ட முறையில் அவர்கள் சவதரித்த செல்வத்திற்கும், ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும் சராசரி விகிதத்திற்கும் உள்ள அளவிற்குமேற்ப, ஒரு ஊழியக்காரர் சமுதாயத் தோடு தொடர்புகொள்ளக்கூடிய வகையில், முடிந்தவரையில் சராசரிநிலையில் வாழ பரிந்துரைக்கப்படுகிறது. சமூக ஏணியில் மிகவும் உயர்ந்த நிலையில் ஒரு ஊழியக்காரர் வாழும்பொழுது, அவரால் ஏழைகளை ஆதாயமாக்க முடியாது. சமூக ஏணியில் மிகவும் தாழ்ந்த நிலையில் அவர் வாழும்பொழுது பணக்காரர்களையும் அதிபணக்காரர்களையும் ஆதாயமாக்க அவரால் இயலாது. குடிசைகளில் வசிப்பவர்களையும் பங்களாக்களில் வசிப்பவர்களையும் ஆதாயமாக்கக் கூடிய நிலையில் ஒரு ஊழியக்காரர் வாழவேண்டும். பாதகமோ சாதகமோ இல்லாமல், ஏழைகளையும் பணக்காரர்களையும் ஆதாயமாக்கும் வகையில் வாழ அவர் முயற்சி செய்ய வேண்டும்.

எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன் என்று பவுல் சொன்னார் (1 கொரி. 9:22). ஒரு ஊழியக்காரர் செழிப்படைவது அல்லது கோடீஸ்வர ஊழியம் செய்வது தவறு என்று இதன் பொருள் அல்ல. செல்வத்திற்கு தேவனை எந்த அளவு விசுவாசிக்க முடியுமோ, அந்த அளவு அவர் செழிப்படைய முடியும். எனினும், தனது வார்த்தையினாலும் முன் உதாரணமாய் இருப்பதனாலும், எல்லா மனிதரையும் ஆதாயமாக்கும் திறமையை தன் செல்வத்தில் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் (1 தீமோ. 4:12).

மற்றவர்கள் விரும்பி அவரைப் பின்பற்றக்கூடிய வாழ்க்கை முறையில் ஒரு ஊழியக்காரர் வாழ்வது புகழப்படத்தக்கதே. ஆனால், லட்சாதிபதிகளும் கோடீஸ்வரர்களுமான கிறிஸ்தவர் களுக்கும் அப்படி இருப்பதே மிகவும் புகழப்படத்தக்கதாகும். இந்த உலகம் நமக்கு வீடல்ல என்ற கண்ணோட்டத்தை கிறிஸ்தவர்கள் ஒருபோதும் இழந்துவிடக் கூடாது. ஆனால், நாம் அதைக் கடந்து சென்று, தேவ நகரத்திற்காக காத்திருக்கும் அந்நியர் பரதேசிகளைப் போலவே நாம் இருக்கிறோம் (எபி. 11:13–16). இதற்காக, இப்படிப்பட்ட கிறிஸ்தவர்களை உலகம் கேலிக்கூத்தாடலாம். ஆனால், இவர்கள் எபிரெயர் பதினோராம் அதிகாரத்திலுள்ள விசுவாச வீரர்களின் பட்டியலில் நிச்சயம் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அது, இந்த உலகம் அளிப்பதைவிட மிகப்பெரிய பொக்கிஷமாயிருக்கும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

### *சமச்சீர் செல்வமே தேவசித்தம்*

நமது செழிப்பில் தேவன் எவ்வளவு அக்கறையுள்ளவராக இருக்கிறார் என்று இந்த அத்தியாயத்தில் பார்த்தோம். தேவ வழியில் செழிப்பை கிறிஸ்தவர்கள் எப்படி உபயோகிக்க வேண்டும் என்று போதிப்பது மிகுந்த தேவையாயுள்ளது என நாங்களும் கண்டுள்ளோம். பண ஆசை **எல்லா** தீமைக்கும் வேராயுள்ளது (1 தீமோ. 6:10). கொஞ்ச தீமைக்கு வேராயுள்ளது என்று பவுல் சொல்லவில்லை. இதுதான் **எல்லா** தீமைக்கும் வேர் – அஸ்திபாரம் – என்று குறிப்பாக அவர் சொன்னார். நாம் தீயவர்களாக இல்லையா என்பதை, பணத்தோடு நாம் எப்படி சம்மந்தப்படுகிறோம் மற்றும் அதை எப்படி உபயோகிக் கிறோம் என்பதுதான் தீர்மானிக்கும்.

மேலே பட்டியலிட்ட வறுமையின் எல்லா காரணங்களினாலும் ஒரு கிறிஸ்தவர் குற்ற மனசாட்சியோடிருந்தால், முதலாவது அவர் அவைகளை சீர்திருத்திக்கொள்ள வேண்டும். பிறகு, இந்தப் புத்தகத்தில் இனிமேல் நாம் விவரிக்க இருக்கும் பொருளாதார செழிப்பின் கொள்கைகளை பிரயோகிக்க அவர் முயற்சிக்கலாம்.

வேதாகம செழிப்பு என்பது வெறும் பொருளாதார செழிப்பை மட்டும் குறிப்பிடவில்லை என்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம். ஆவிக்குரிய செழிப்பும் அதோடு ஆத்தும செழிப்பும் உள்ளது. நமது மற்ற புத்தகங்கள், ஆவியிலும் ஆத்துமாவிலும் செழிப்பை கட்டி எழுப்பும் போதனைகளைக் கொண்டுள்ளன. பொருளாதார செழிப்பு சம்மந்தமான கொள்கைகளை மட்டும் சுருக்கமாக எழுதுவதே, இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## *அத்தியாயம் 2*

# தசமபாகம் செலுத்துவதின் விதிகள்

நாங்கள் இங்கு எழுதும் செழிப்பின் ஒவ்வொரு விதியும் பொருளாதார செழிப்பின் வித்தியாசமான பகுதிகளுக்கு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும். ஒவ்வொரு விதியும் ஆசீர்வாதத்தின் தனிப்பட்ட ஆவிக்குரிய பகுதிகளை தீர்மானிக்கும். நாம் ஆசீர்வாதத்தின் கீழ் அல்லது சாபத்தின் கீழ் இருக்கிறோமா என்பதை தசமபாகம் செலுத்தவதின் விதி தீர்மானிக்கும். சாபத்தின் கீழ் இருப்பதென்பது நமது சொந்த ஆதாரங்களுக்கு நாம் விட்டுவிடப்பட்டிருப்பதாகும். ஆசீர்வாதத்தின் கீழ் இருப்பது என்பது, நாம் செய்யும் எல்லா காரியங்களிலும் தேவ தயவைப் பெறுவதாகும்.

### *தசமபாகம் செலுத்துவதின் ஆரம்பம்*

மோசேயின் உடன்படிக்கை கொடுக்கப்பட்டபோதுதான் தசமபாகம் செலுத்துவதின் விதிகள் ஆரம்பமானது என சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். தசமபாகம் செலுத்தியதை ஆதியாகமம் முதலாவதாக பதிவு செய்துள்ளது. ஆபிரகாம் மெல்கிசேதேக்கிற்கு தசமபாகம் செலுத்தினான் (ஆதி. 14:20). நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதற்கு மிகவும் முன்னதாகவே, ஆபிரகாம் தசமபாகம் செலுத்துவதை செயல்படுத்தினார். எனவே தசமபாகம் என்பது, மோசேயினுடைய உடன்படிக்கையின் பகுதி அல்ல, மாறாக ஆபிரகாமுடைய உடன்படிக்கையின் பகுதியாக உள்ளது. மோசேயின் உடன்படிக்கையின்போது தசமபாகம் செலுத்துவதின் விதிகள் மிகவும் விவரமாக விரிவாக்கப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளது.

ஆபிரகாமினுடைய உடன்படிக்கையின் நிறைவேறுதலே புதிய ஏற்பாடு ஆகும். எனவேதான் நாம் ஆபிரகாமின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறோம் (கலா. 3:7). நாம் பெற்றுக் கொண்ட சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்கள், ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் என்றும் அழைக்கப் படுகின்றன (கலா. 3:13, 14). ஆபிரகாமினுடைய ஆசீர்வாதங்களின் ஒரு பகுதியே தசம பாகம் செலுத்துவதின் ஆசீர்வாதமாகும்.

தாங்கள் புதிய உடன்படிக்கையிலிருப்பதனால், தசமபாகம் செலுத்துவதின் விதிகளுக்கு மேலே இருக்கிறோம் என்று சில கிறிஸ்தவர்கள் விவாதிக்கிறார்கள். தேவனுக்கு அதிகமாக கொடுப்பதை தவிர்ப்பதற்கு சொல்லப்படும் வழக்கமான சாக்குப்போக்குத்தான் இது. புதிய உடன்படிக் கையில் இருக்கிறோம் என்பதன் கூற்று, பழைய ஏற்பாட்டின் சன்மார்க்க விதிகளை மீற முடியும் என்பது அர்த்தமாகாது. சன்மார்க்க நியமநிலைக்கும், அதற்கு அதிகமாகவும் நாம் வாழவேண்டும். தசமபாகம் செலுத்துவதின் விதிகளை, புதிய உடன்படிக்கையில் நாம் நிறைவேற்றுவதோடு அதற்கு அதிகமாகவும் செய்ய வேண்டும்.

### *தசமபாகத்தின் வரையறை*

'மாசர்' என்ற எபிரேய வார்த்தையிலிருந்தும், 'டிகாடே' என்ற கிரேக்க வார்த்தை ஆகிய இரண்டிலிருந்தும் வருகிற 'தசமபாகம்' என்ற வார்த்தையின் பொருள் 'பத்தாவது' என்பதாகும். எனவே தசமபாகம் தெளிவாகவும் குறிப்பாகவும் நமது உடமைகளில் பத்தில் ஒன்று என்பதாகும். திட்டவட்டமாக சொல்லப்போனால், பத்து சதவீதத்திற்கு குறைவோ அதிகமோ தசமபாகம் என்று வகைப்படுத்த இயலாது. பழைய ஏற்பாட்டில் ஜனங்களுடைய ஒவ்வொரு பத்து சதவீத பணம், உற்பத்தி அல்லது கால்நடைகள், அவர்களது தசமபாகமாயின.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

எல்லா தசமபாகங்களும் தனக்கு சொந்தமானதே என்று தேவன் உரிமைபாராட்டுகிறார். தசமபாகம் கர்த்தருக்குப் பரிசுத்தமானது என்று அவர் பிரகடனப்படுத்துகிறார் (லேவி. 27:30). தசமபாகம் நமக்கு சொந்தமானதே இல்லை என்பதால், நாம் தசமபாகம் கொடுக்காமல், நாம் நமது தசமபாகத்தை தேவனிடம் கொண்டுவருகிறோம். முதலாவது, நமக்கு சொந்தமல்லாததை நாம் கொடுக்க முடியாது. தசமபாகத்தை முடக்கி வைப்பது உண்மையிலேயே தேவனுடையதை திருடுவதாகும் (மல். 3:8).

தசமபாகம் தேவனுக்கு சொந்தமானதால், எந்த மிருகத்தை தேவனுக்கு கொண்டுவரலாம் என்று தெரிந்தெடுக்க பழைய ஏற்பாட்டு மக்கள் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் மிருகங்களை எண்ணுகையில் வரிசையில் பத்தாவதாக வந்த ஒவ்வொன்றையும் தேவனுக்கு கொண்டு வந்தார்கள் (லேவி. 27:32, 33). ஒருவேளை அவர்கள் பத்தாவது மிருகத்திற்கு பதிலாக வேறொன்றை மாற்றினால், மாற்றப்பட்டதும் அந்தப் பத்தாவது மிருகமும் ஆகிய இரண்டும் தேவனுக்குச் சொந்தமாகும் (லேவி. 27:10). தேவனிடமிருந்து அந்தப் பத்தாவது மிருகத்தை திரும்ப விலைக்கு வாங்க விரும்பினால், அந்த மிருகத்தின் மதிப்பிற்கு ஐந்தில் ஒரு பகுதியை (இருபது சதவீதம்) கூட்டி தேவனுக்கு செலுத்த வேண்டும் (லேவி. 27:31).

தசமபாகத்தை தொட்டவருக்கு தேவனின் வட்டிவீதம் இருபது சதவீதமாகும். தங்களது தசமபாகத்தை பணமாக செலுத்துவதற்கு பதிலாக, பொருளாகவோ சேவையாகவோ மாற்றிக்கொள்ள சில கிறிஸ்தவர்கள் முயற்சிக்கின்றனர். எந்த அமைப்பில் உங்களது வருமானத்திலிருந்து தசம பாகம் வருகிறதோ, அவ்வண்ணமே நீங்கள் கொடுக்க வேண்டும். தசமபாகம் உங்களுக்கு சொந்தமானதல்ல. அதை ஒன்றிற்கு பதிலாக மாற்றவோ, ஒன்றை மற்றொன்றாகவோ, அல்லது அதை பயன்படுத்தவோ உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. பணமானது முக்கிய பண்டமாற்று வியாபாரப் பொருளாக நமது நவீன சமுதாயத்தில் உள்ளது. ஒரு கிறிஸ்தவன் தனது தசமபாகத்தை பொருட்களை வாங்க பயன்படுத்தி, அவைகளை ஊழியக்காரருக்கோ திருச்சபைக்கோ கொடுப்பதும் தவறாகும். தசமபாகம் நமக்கு சொந்தமானதல்ல. அதை பயன்படுத்தவோ வேறொரு பொருளாக மாற்றவோ எந்த உரிமையும் நமக்கு இல்லை. உங்களுக்கு எந்த வியாபார பொருளாக வந்ததோ, அப்படியே உங்களது தசமபாகத்தை செலுத்துங்கள். தேவ ஆசீர்வாதங்கள் உங்கள் மேலிருக்கும்.

### *தசமபாகம் செலுத்தும் செயல்முறை*

தசமபாகம் செலுத்துவதில் போராடும் இரண்டு வகையான கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர். ஏழைகளும் தேவைகளோடிருப்பவர்களும் முதல்வகையை சேர்ந்தவர்கள். தங்களது உணவுக்கோ, உடைக்கோ, இருப்பிடத்திற்கோ செலுத்துவதற்கு போதுமான பணம் அவர்களுக்கு வந்து சேர்வதில்லை. தங்களது தசமபாகத்தை கொண்டுவருவதற்கு தங்களது சில நேர உணவுகளை தவிர்க்க வேண்டியிருக்கும். தேவனுக்கு தசமபாகம் செலுத்துவதன் ஆசீர்வாதங்களை தைரியமாய் உரிமை கொண்டாட இவர்களுக்கு சவாலிடுகிறோம். நமது தசமபாகத்தை கொண்டுவரும்போது, மீதமுள்ள தொண்ணூறு சதவீதமும் தேவ ஆசீர்வாதத்தோடு கடந்து செல்லும். சபிக்கப்பட்ட நூறு சதவீதத்தை விட ஆசீர்வதிக்கப்பட்ட தொண்ணூறு சதவீதம் மிகவும் நல்லதாகும். தேவ ஆசீர்வாதமில்லாமல் வியாதிகள், பேராபத்துக்கள் மற்ற தீமைகள் மூலமாக பிசாசு அநேகமாக பத்து சதவீதத்திற்கு அதிகமாகவே திருடிவிடுவான்.

தசமபாகம் செலுத்த போராடும் மற்ற வகை மக்கள் பணக்காரர்களாயிருப்பவர்கள். நூறு ரூபாயின் தசமபாகம் பத்து ரூபாய் மட்டுமே, ஆயிரம் ரூபாயின் தசமபாகம் நூறு ரூபாய் மட்டுமே. எனினும், ஒரு லட்சம் ரூபாயின் தசமபாகம் பத்தாயிரம் ரூபாய், பத்துலட்ச ரூபாயின் தசமபாகம் ஒரு லட்சம் ரூபாய். இப்படிப்பட்ட எண்களை இவர்கள் கணக்குப் போடும்பொழுது, அவர்கள் தசமபாகத்தை கொண்டுவருவதில்லை அல்லது தங்கள்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

தசமபாகத்தை பிரித்துவிடுகிறார்கள். ஒருசிலர் மற்ற பொருட்களாக கொடுக்க தங்கள் தசமபாகத்தை மாற்றிய குற்றமனசாட்சி உடையவர்களாக இருக்கிறார்கள்.

தசமபாகம் தசமபாகம்தான் என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். அது தேவனுக்கு சொந்தமானது, சிறியதோ பெரியதோ என்பது ஒரு பொருட்டல்ல. அப்படிப்பட்டவர்கள் தசம பாகத்தை எடுத்தாலோ அல்லது அதை அவர்கள் பயன்படுத்தினாலோ தசமபாகத்தோடு இன்னும் இருபது சதவீதம் சேர்த்து தேவனுக்கு செலுத்த கடன்பட்டுள்ளார்கள். தேவனுடைய தசமபாகங்களில் அனாவசியமாக தலையிடுவது முட்டாள்தனமானதும் அபாயகரமானதுமாகும்.

### *தசமபாகங்களை உள்ளே கொண்டுவருதல்*

பழைய ஏற்பாட்டில் தேவன் எல்லா தசமபாகங்களையும் லேவியருக்கு கொடுத்தார் (எண். 18:21). லேவியராயிருந்ததினால் அவர்களுக்கு தசமபாகம் கொடுக்கப்படாமல், அவர்கள் செய்து நிறைவேற்றுகிற வேலைக்காகவே கொடுக்கப்படுகிறது.

“இதோ, லேவியின் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்குள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்கு சுதந்திரமாகக் கொடுத்தேன்” – எண்ணாகமம் 18:21.

அப்படியானால், புதிய ஏற்பாட்டில் லேவியர்கள் யார்? ஆசரிப்புக்கூடாரத்தின் வேலையை செய்கிறவர்கள். மெய்யாகவே, நவீன ஆசரிப்புக்கூடாரம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் திருச்சபையே. பழைய உடன்படிக்கையிலிருந்த லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் பணி விடைக்காக தங்களை அர்ப்பணித்திருந்தார்கள். ஆசரிப்புக்கூடாரத்தில் பணிவிடை செய்ய அவர்கள் தங்கள் லௌகீக வேலையை விட்டுவிட்டார்கள். இயற்கையாகவே, திருச்சபையில் இந்நாட்களில் முழுநேர ஊழியம் செய்கிறவர்களையே இது குறிக்கும்.

அநேக கிறிஸ்தவர்கள் ஊழியக்காரர்களுக்கு கொடுப்பதைவிட ஒரு நிறுவனத்திற்கு கொடுப்பதே உசிதமென நினைக்கின்றனர். தேவன் ஒரு நிறுவனத்தை அழைத்து அபிஷேகிக்காமல், மனிதர்களையே அவருடைய சேவைக்காக அழைத்து அபிஷேகிக்கிறார் என்ற கூற்றை அவர்கள் மறந்துவிடுகின்றனர். ஊழியத்தின் நிறுவனம் அபிஷேகிக்கப் பட்டதல்ல, ஆனால் மனிதர்கள்தான் அபிஷேகிக்கப்பட்டவர்கள். அபிஷேகிக்கப்பட்ட மனிதர்கள் அந்த நிறுவனங்களை விட்டு சென்று விடும்பொழுது, அந்த அபிஷேகம் அந்த நிறுவனத்தை விட்டு நீங்கும், மீதமிருப்பதெல்லாம் அந்த நிறுவனத்தின் காலியான மேல் ஓடுதான். தனிப்பட்ட முறையில், நான் எப்பொழுதுமே எனது தசமபாகங்களை நிறுவனத்திற்கு அல்ல ஊழியக்காரர்களுக்கோ (அல்லது நேரடியாக அவர்கள் ஊழியங்களுக்கோ) செலுத்தியுள்ளேன். ஏனெனில் அவர்களில்லாமல் நிறுவனம் செயல்படமுடியாதென்று எனக்கு தெரியும். பழைய ஏற்பாட்டில் அவரது ஊழியர்களையும், புதிய ஏற்பாட்டில் ஐந்துவகை ஊழியர்களையும் தாங்குவதற்கு தேவன் ஸ்தாபித்த ஒழுங்குதான் இது. பழைய ஏற்பாட்டில் மோசேக்கு கொடுக்கப்பட்ட தசமபாகத்தில் பத்தில் ஒரு பங்கு, புதிய ஏற்பாட்டில் ஐந்துவகை ஊழியங்களைச் செய்யும் ஊழியர்களுக்கு சொந்தமாகும் (எண். 18:25–26).

### *கடைசிகால ஐந்துவகை ஊழியங்களின் தரிசனம்*

20ஆம் நூற்றாண்டின் கரிஸ்மேட்டிக் எழுப்புதலின் காலத்தில் தீர்க்கதரிசன ஊழியத்தில் செயல்பட்ட ஆன்று டபல்யூ ராஸ்முயூசன் அவர்களுக்கு கடைசிகால திருச்சபையின்

தரிசனம் ஒன்று கொடுக்கப்பட்டது. (The Last Chapter by A. W. Ramussen, Pages 203 – 207) பின்வருமாறு:

*பேரிடப்படாத பிரமாண்டமான கதீட்ரல் ஒன்றின் முன்பு நான் நின்றுகொண்டிருந்தேன். அதன் கம்பீரமான கோபுரம் ஆகாயத்தை நோக்கி, நிலைநிறுத்தப்பட்ட ஏவுகணையைப்போல கூராயிருந்தது. அதன் கோத்திக் வளைவுகள் அழகாகவும் உறுதியாகவும் இருந்தன. அதன் சுவர்களெல்லாம் பருத்த உதைமானச் சுவரினால் பெலப்படுத்தப்பட்டிருந்தன. அதனுடைய ஜன்னல்களெல்லாம் சிக்கலாக வடிவமைக்கப்பட்டிருந்த புள்ளிகளுள்ள கண்ணாடிகளினால் உண்டாக்கப்பட்டிருந்தன. அந்த கட்டிடத்திலிருந்த ஒவ்வொரு கற்களும் சுத்தமான கருங்கல்லினாலுண்டானது. இப்படிப்பட்ட மாளிகையை கட்ட தேவையாயிருந்த மிகப் பெரிய தொகையை யோசித்துப் பார்த்தேன். கைவண்ணத்தின் என்ன சாதனை அது! அந்த மிகப்பிரமாண்டான கதீட்ரலை நான் உற்றுப் பார்த்தபோது ஒரு சத்தம் பேசினது:*

*"என் மகனே", அந்த சத்தம் பேசினது, "ஜனங்கள் சொல்கிறார்கள், 'எவ்வளவு அழகான திருச்சபை!' என்று. ஆனால், நான் உனக்கு சொல்கிறேன், இது என்னுடைய திருச்சபை அல்ல!"*

*நான் அவசரப்பட்டு அடுத்தது அவர் என்ன சொல்கிறார் என்று எனக்கு தெரியும் என்று நான் நினைத்தேன். ஆனால் அந்த தரிசனம் மாறிவிட்டது. அயல் நாட்டிலே ஒரு பெரிய பட்டணத்தின் தெருவிலே நான் நிற்பதாக என்னை பார்த்தேன். சாலைகள் கூழாங்கற்களைப்போன்ற சிறிய கற்களினால் போடப்பட்டிருந்தன. இரண்டு சக்கர மாட்டு வண்டிகள் விளைபொருட்களை ஏற்றி, அதன் சொந்தக்காரர்கள் அதின்மேல் உட்கார்ந்து, சந்தைக்கு போய்க்கொண்டிருந்தனர். சாலைகள் மிகவும் மோசமான நிலையிலிருந்தன. அந்த கற்கள் இங்குமங்குமாய் கிடந்தன. மற்ற இடங்களில் வெறும் மண் மாத்திரமே இருந்தது. சில இடங்களில் மண் ஓட்டைகள் இருந்தன. அவைகளில் சில கற்கள் தெருக்களில் கிடந்தன. இந்த பரிதாபமான கற்களை கவனித்து தெருவில் நடந்து செல்கையில், அந்த கற்களிலிருந்து வருகிற சத்தத்தை நான் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போனேன்!*

*"வாருங்கள்! இங்கு வாருங்கள்!" என்று அவைகள் கூப்பிட்டன. "வந்து எங்களை ஆண்டவருடைய ஆலயமாக கட்டுங்கள்" பயங்கரமான நெருக்கத்தில் அவைகள் இருப்பதைப்போல பரிதாபமாக அழைத்தன.*

*பிறகு எனது தரிசனம் தூரமான தொடுவானத்திற்கு நேராய் ஈர்க்கப்பட்டது. அங்கே இந்த பரிதாபமான கற்களின் கூக்குரலுக்கு பதிலாக, தூரத்திலே தேவ மனிதர்களை கண்டேன். அந்த பழைய கற்களை சேற்றிலிருந்து எடுத்து தேவனுடைய ஆலயமாக கட்டும் நோக்கில் அவர்களில் அநேகர் வந்துகொண்டிருந்தார்கள். அந்த கற்களின் அழைப்பிற்கு பதில் கொடுக்க தங்கள் சகல பெலத்தோடும் ஓடிக்கொண்டிருந்தார்கள்.*

*ஆனால், ஏதோ ஒன்று அவர்களை தடுத்ததை நான் பார்த்தேன். காணமுடியாத சுவர் ஒன்று இருப்பதாக அங்கு காணப்பட்டது. அவர்கள் அதுவரைக்கும்தான் வரமுடிந்தது அதற்குமேல் முடியவில்லை. அந்த சுவரை கடந்து செல்ல எவ்வளவோ முயன்று பார்த்தார்கள். அவர்கள் அதற்கு எதிராக நின்று தள்ளினார்கள். அதை உடைத்துத் தள்ள முயன்றார்கள். அதன்மேல் ஏற முயன்றாகர்கள். ஒருவரும் அதில் வெற்றிபெறவில்லை.*

*"எவ்வளவு விநோதமானது" என்று நான் நினைத்தேன். "அவர்கள் வர விரும்பினார்கள், ஆனால் அவர்களால் இயலவில்லை. அவர்களை தடுத்தது என்ன என்று நான் ஆச்சரியப் பட்டேன். பிறகு ஆண்டவர் என்னோடு திட்டமாகவும் தெளிவாகவும் பேசத் தொடங்கினார்.*

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

*“அந்த தரிசனத்தின் கடைசிப்பகுதியை முதலாவது விளக்கிச் சொல்வேன்” என்று அவர் சொன்னார். “இரட்சிப்பின் வார்த்தையை கேட்காத லட்சக்கணக்கான மக்களையே சேற்றில் இருந்த அந்த கற்கள் குறிக்கின்றன. யாரும் உதவி செய்யாத நிலையில், அவர்கள் தங்கள் பாவங்களிலே வருடா வருடம் வாழ்கின்றனர். இரட்சிப்பின் செய்தியை யாராவது மட்டும் அவர்களுக்கு எடுத்துச்சென்றிருந்தால், நான் கட்டுகிற என் திருச்சபையில் ‘ஜீவனுள்ள கற்களாக’ அவர்கள் மாறியிருப்பார்கள்.*

*“எனது அநேக ஊழியக்காரர்கள் மேல் இப்பொழுது என்னுடைய ஆவியிலிருந்து ஊற்றிக்கொண்டிருக்கிறேன்.” என்று ஆண்டவர் தொடர்ந்து சொன்னார். “எனது திருச்சபை வரங்களினாலும் வல்லமையாலும் தரிப்பிக்கப்படுகிறது, தனது அழகிற்கும் மகிமைக்கும் பழைய சீர்நிலைக்கும் அது திரும்பும் அநேகர் வல்லமையால் அபிஷேகிக்கப்பட்டிருந்தாலும், அந்தக் கற்களின் அழைப்பை அநேகர் கேட்டுக்கொண்டிருந்தாலும், அவர்கள் அந்த அழைப்பிற்கு பதில் கொடுக்க அவர்கள் தடைசெய்யப்படுகிறார்கள். எனது திருச்சபை தனது முழுமையான மகிமைக்கு திரும்ப சீர்திருத்தப்படுவதற்கு முன்பு, காணக்கூடாத சுவரின் இரகசியத்தை அது கற்றுக்கொள்ள வேண்டும்”.*

*“தயவு செய்து எனக்கு சொல்லுங்கள்” என நான் கெஞ்சிக் கேட்டேன், “தடைசெய்வது என்ன என்று உமது ஜனங்களுக்கு சொல்வேன்”.*

*“இதுதான் அதன் பொருள்” என்று அவர் சொன்னார். நிதி பற்றாக்குறையினால் எனது அபிஷேகிக்கப்பட்ட ஊழியக்காரர்கள் தடைசெய்யப்படுகிறார்கள். தசமபாகம் அவர்களுக் குரியது. அவர்களுடைய உபயோகத்திற்காகவே அதை நான் நியமித்துள்ளேன். ஆனால், மிகப்பெரிய ஆலயங்களையும், கதீட்ரல்களையும், கட்டுவதற்கும் கட்டிட கலைஞர்களுக்கு கொடுப்பதற்கும் என் ஜனங்கள் தசமபாகத்தை பயன்படுத்திவிட்டார்கள். ‘தேவனுக்கு எவ்வளவு அழகான திருச்சபையை கட்டியுள்ளோம்’ என்று அவர்கள் சொல்கிறார்கள்!’ எனது அபிஷேகிக்கப்பட்ட ஊழியர்களுக்கு சொந்தமான தசமபாகங்களை திருடி, அவைகளை அடமானத்திற்கும் வட்டிக்கும் செலுத்த பயன்படுத்துகிறார்கள். எனது திருச்சபை நிதி தட்டுப்பாட்டினால் கட்டப்படாமல் போகிறது”.*

### தேவன் மனிதர்களை அபிஷேகிக்கிறார் நிறுவனங்களையல்ல

அபிஷேகிக்கப்பட்ட மனிதர்கள், தங்கள் வாழ்வின் மேலுள்ள தேவ அழைப்பை செயல்படுத்த பயன்படும் உபகரணங்களே நிறுவனங்கள். தேவன் மனிதர்களுக்குள் கிரியை செய்யும் வேதாகம நடைமுறை யாதெனில், நிறுவனங்களைக் காட்டிலும் மனிதர்களையே தேவன் தெரிந்தெடுக்கிறார். எந்த மனிதனும் இன்றியமையாதவரல்ல. தேவன் அழைக்கும் மனிதன் தேவனுக்கு கீழ்ப்படியாவிட்டால், தேவன் மற்றொரு மனிதனை எழுப்புகிறார். எனினும், நிறுவனங்கள் சுயமாக தொடர்ந்து நிலைத்திருப்பதற்கும் மனிதர்களைக் கட்டுப்படுத்துவதற்குமானவைகள் அல்ல. ஓய்வுநாள் மனிதர்களுக்காக உண்டாக்கப்பட்டது, மனிதர்கள் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை. நிறுவனங்கள் மனிதர்களுக்காக உண்டாக்கப்பட்டது மனிதர்கள் நிறுவங்களுக்காக உண்டாக்கப்படவில்லை.

ஒரு ஊழியக்காரருக்கு தசமபாகம் கொடுப்பதிலுள்ள அநேகருடைய பயம், தேவன் மனிதர்களை அபிஷேகிக்கிறார், நிறுவனங்களையல்ல என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ளமலிருப்பதினாலல்ல, ஆனால் நிதியைக் கையாள்வதில் உள்ள கணக்கு கொடுக்கும் தன்மையையும் உக்கிராணத்துவத்தையும் காணும் விருப்பம் அதிகமாய் உள்ளதாலேயே. ஒவ்வொரு ஊழியரும் தங்களது தனிப்பட்ட நிதியை ஒரு தகுதிப் பெற்ற கணக்காளர் மூலமாக சரியாக வரவு செலவு கணக்கு பார்த்து தணிக்கை செய்ய வேண்டும் என்று நான் நம்புகிறேன். இன்னும் சிறப்பானது என்னவெனில், தங்களது சொந்த ஊழியங்களுக்கு மக்கள் தசமபாகம் கொடுக்கும்படி அவைகளை உண்டாக்கிக் கொள்ள வேண்டும். தங்களது சொந்த ஊழியத்திலிருந்து ஒரு சம்பளத்தை பெற்றுக் கொண்டு மீதியுள்ளதை தேவ ராஜ்யம் தொடர்ந்து செயல்பட பயன்படுத்த முடியும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

ஊழியக்காரருக்கு தசமபாகத்தை செலுத்த ஜனங்கள் பயபடுவதில்லை. நிதி தவறாகப் பயன்படுத்துவதற்காக மட்டுமே அவர்கள் பயப்படுகிறார்கள். கணக்கு கொடுக்கும் மற்றும் உக்கிராணத்துவ கொள்கைகள் ஸ்தாபிக்கப்படும் என்றால், ஊழியருக்கு நேரடியாகவே தசமபாகம் கொடுக்க ஜனங்கள் அதிக ஆவலுள்ளவர்களாய் இருப்பார்கள். வருத்தப்படத் தக்க காரியம் என்னவெனில், பெருந்தொகையான பணத்தை கையாள அனுபவமற்றவர்களாய் ஊழியக்காரர்களிருப்பதே. பெருந்தொகையான பணத்தை பெற்றுக்கொள்ளும்பொழுது, கிறிஸ்துவின் இராஜ்யத்தினுடைய விரிவாக்கத்திற்கு திரும்பவும் முதலீடு செய்யாமல், அவர்களில் அநேகர் அதை செலவழித்துவிடுகிறார்கள். சிறு பிள்ளைகள் கைசெலவிற்கு பெற்றுக்கொள்ளும் எல்லா பணத்தையும், சாக்குலெட்கள் மற்றும் ஐஸ்கிரீம் போன்றவை களுக்காக செலவழிப்பதைப்போலவே அவர்கள் இருக்கிறார்கள். இந்த காரணத்தினாலேயே அநேக ஜனங்கள் ஒரு நிறுவனத்திற்கு தங்கள் தசமபாகத்தை கொண்டு வருகிறார்கள், அங்கே அவர்கள் செலவுகளை கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் முடியும்.

எனினும், ஒரு நிறுவனத்திற்கு நாம் கொண்டுவரும் நிதியை கண்காணித்தல் சிந்தனையில் அடுத்த ஒருபுறச்சாய்வுக்கும் கொண்டுபோய்விடும். தங்களது தசமபாகத்தாலும் காணிக்கைகளாலும் சில ஜனங்கள், ஒரு ஊழியத்தை கட்டுப்படுத்த முயற்சி செய்கின்றனர். தசமபாகம் செலுத்தவது மற்றும் கொடுப்பதன் சாராம்சம் என்னவெனில், கொடுத்துவிட்டால் நம்முடைய தாகவே ஆகாது (எப்படியானாலும் தசமபாகம் நம்முடையதல்ல). இப்பொழுது அது பெற்றுக் கொண்டவரின் அதிகார எல்லைக்குட்பட்டதாகும்.

நான் ஒருவருக்கு குளிர்சாதனப் பெட்டியை கொடுத்தால், இன்னும் அது என்னுடையது தான், அதை திரும்ப எடுத்துக்கொள்வேன் என்று நான் சொல்ல முடியாது. அந்த குளிர்சாதன பெட்டியை எப்படி பயன்படுத்துவது என்று அந்த நபருக்கு சொல்வது எனக்கு சரியானதாக இருக்காது. அந்த நபர் அதை விற்று கொடுத்துவிட தீர்மானிக்கும்போது நான் சந்தோஷத்தை இழந்து கவலைப்படக்கூடாது. ஏனெனில், இப்பொழுது அது அவருடையது என்னுடையதல்ல. சிலர் உண்மையாகவே, கொடுப்பதில்லை அவர்கள் இரவல் கொடுக்கிறார் கள் அல்லது கடன்கொடுக்கிறார்கள். இது தசமபாகம் செலுத்ததல் அல்லது காணிக்கை கொடுத்தலின் விதி அல்ல, இது கடன் கொடுப்பதின் விதியாகும்.

தசமபாகம் அல்லது காணிக்கை கொடுப்பதற்கு முன்புதான் கண்காணிப்பு செய்யப் பட்டிருக்க வேண்டும். அதற்குப் பிறகு அல்ல. நமது தசமபாகங்களை எங்கு கொண்டு செல்ல வேண்டும் என்று நாம் ஜெபித்து, ஆண்டவரைத் தேடியிருக்க வேண்டும். ஆவிக்குரிய நிலையில் எந்த ஊழியங்கள் நம்மை போஷித்தது என்று காண, நம்மை நாமே ஆராய்ந்திருக்க வேண்டும். ஆவிக்குரிய நிலையில் நம்மை போஷித்தவர்களுக்குத்தான் தசம பாகம் சொந்தமாகும். நமது வாழ்வில் வார்த்தையிலும் உபதேசத்திலும் உழைத்தவர்கள்தான் நமது தசமபாகத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் (1 தீமோ. 5:17, 18).

சுவிசேஷத்தை அறிவிக்கறவர்களுக்கு சுவிசேஷத்தினால் பிழைப்புண்டாக வேண்டும் என்பது அவர்களின் உரிமை என்று பவுல் மிகவும் தெளிவாக சொல்கிறார் (1 கொரி. 9:13, 14). ஆவிக்குரியவைகளை விதைப்பவர்களுக்கு சரீர நன்மைகளை அறுக்க உரிமை உண்டு (1 கொரி. 9:10, 11). தியகம் செய்து கிரயம் செலுத்தி கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின்மேல் ஆவிக்குரிய மண்டலத்திலிருந்து ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறவர்கள் கனப்படுத்தப்பட்டு பலனளிக்கப்பட வேண்டும்.

எனினும் பவுல் இந்த உரிமையை கொரிந்து சபையில் பயன்படுத்தவில்லையென தெளிவாக சொல்கிறார் (1 கொரி. 9:15). பவுலின் உதாரண வாழ்விலிருந்து இங்குதான் ஊழியக்காரர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த சத்தியத்தை எடுத்து தங்கள் சபை களில் சுமத்துவது ஊழியக்காரர்களுக்கு சரியானதாகாது. ஊழியத்திலே நிதியினால் நம்மை ஆதரிக்க, ஜனங்களை வழிநடத்த தேவனை நோக்கிப்பார்க்க வேண்டும். ஆதரிக்கத்தான் வேண்டுமென்று உரிமைபாராட்டி, மாம்ச கையின்மேல் நம் சிந்தனையில் ஒரே புறமாகச் சாய்ந்துவிடக்கூடாது.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

### *தசமபாகம் செலுத்தவதன் ஆசீர்வாதங்கள்*

தசமபாகம் செலுத்தவதின் பிரமாணம், நாம் ஆசீர்வாதங்களில் வாழ்கிறோமா அல்லது சாபத்தில் வாழ்கிறோமோ என்று தீர்மானிக்கிறது. தீமைக்கு தேவன்தான் பொறுப்பு என்பது இதன் அர்த்தமல்ல. ஆனால், பிசாசு நமக்கு விரோதமாக செயல்பட நமது கீழ்ப்படியாமை கதவைத் திறக்கிறது. ஆகாய் தீர்க்கதரிசி தனது காலத்திலிருந்த இஸ்ரவேலருக்கு சொன்னதுபோல நமது சூழ்நிலையாக இருக்கலாம்.

"நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக்கொண்டு வருகிறீர்கள்;
நீங்கள் புசித்தும் திருப்தியாகவில்லை;
குடித்தும், பரிபூரணமடையவில்லை;
நீங்கள் வஸ்திரம் உடுத்தியும் ஒருவனுக்கும் குளிர்விடவில்லை;
கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலானபையிலே போடுகிறவனாய் அதை சம்பாதிக்கிறான்"
– ஆகாய் 1:6.

சாபத்திற்கு கீழ் வாழ்வதென்பது, நமது வாழ்க்கையின் எல்லா முயற்சிகளிலும் வெறுமையான ஒரு சுவற்றிற்கு முன்பு ஓடுபாதைப்போன்றதாகும். சன்மார்க்க நியதிகளை நாம் கடைப்பிடிக்க வேண்டுமமென்று தேவன் சொல்வதின் நோக்கம், அது அவருக்கு உதவியாயிருக்கும் என்பதற்கல்ல, குடும்ப வாழ்க்கையின் முழுமையான ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்க உதவிசெய்யும் என்பதற்காகவே. (இந்த பூமியில் உள்ள எல்லா வெள்ளியும் பொன்னும் அவருக்கு சொந்தமானவைகளே) நமது வாழ்க்கையில் அவரது விசேஷித்த ஆசீர்வாதங்களை கொண்டுவர அவருக்கு அது உரிமையளிக்கிறது. தேவன் பட்சபாதமுள்ளவரல்ல (அப். 10:34). தேவன் பாரபட்சம் காட்டுபவருமல்ல. அவர் எல்லாருக்கும் நியாயமும் நீதியுமுள்ளார். அதே கொள்கைகளின் அடிப்படையில் ஒருவருக்கு கொடுப்பதை, எல்லாருக்கும் கொடுக்க அவர் விருப்பமுள்ளவராக இருக்கிறார். அவர் எல்லா மனிதருக்கும் நியாயமாகவும் நீதியாகவும் இருக்கிறபடியால், தங்களுடைய வாழ்வின் எல்லா அம்சங்களின் மேலும், யாராவது அவருடைய விசேஷித்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பினால், அவருடைய களஞ்சியத்திற்கு தங்களுடைய உடைமைகளில் பத்தில் ஒரு பங்கை கொண்டுவர வேண்டும். தேவனுடைய ஆசீர்வாதங்கள் கொள்கை களை சார்ந்தே உள்ளன.

நாம் தேவனுதக்கு தசமபாகம் செலுத்தும்பொழுது ஏழுமடங்கு ஆசீர்வாதங்கள் உள்ளன:

1. வானத்தின் பலகணிகள் நமக்கு திறக்கப்படும்.
2. நமது வாழ்வில் வரும் ஆசீர்வாதங்கள் குறைவாக அல்ல, நிறைவாகவே நம் வாழ்க்கையில் வந்து சேரும்.
3. நமது எல்லா தேவைகளும் சந்திக்கப்பட்டு, இடம் கொள்ளாமல் போகுமட்டும் ஆசீர்வதிக்கப்படுவோம்.
4. பட்சிக்கிறவனை தேவன் தாமே கடிந்துகொள்வார், நமது வாழ்விற்குப் பக்கத்தில் கூட வரவிடாமல் தடுப்பார்.
5. தவறாமல் நமது எல்லா அறுவடையையும் நாம் அறுப்போம்.
6. நமது திராட்சைசெடி (நமது முயற்சிகள்) எல்லாம் பலன் கொடுக்கும்.
7. நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களென்று நம்மை சுற்றிலுமிருப்பவர்கள் நம்மை அழைப்பார்கள் (மல். 3:10–12).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

*அத்தியாயம் 3*

# காணிக்கையின் பிரமாணம்

காணிக்கையின் பிரமாணம் தசமபாகம் செலுத்துவதின் பிரமாணத்தைவிட மிகவும் வேறு பட்டது. காணிக்கைகள் நமக்கு சொந்தமானவைகள், நமது சுயசித்தத்தினாலே தசமபாகத்திற்கு மேலும் மற்றும் அதற்கு அதிகமாகவும் கொடுக்கிறோம். பத்து சதவீதத்திற்கு மேலும் மற்றும் அதற்கு அதிகமாகவும் உள்ளது காணிக்கையாக கருதப்படும். நாம் ஆசீர்வாதத்தில் வாழ்கிறோமா அல்லது சாபத்தில் வாழ்கிறோமா என்பதை தசமபாகம் கொடுத்தலின் பிரமாணம் நிர்ணயிக்கும்பொழுது, நமது ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்ளும் அளவை நிர்ணயிப்பது காணிக்கையின் பிரமாணமே.

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்" **– லூக்கா 6:38.**

நாம் எந்த அளவை பயன்படுத்துகிறோமோ அதே அளவுதான் நமக்கும் அளக்கப்படும். நாம் ஒரு மேஜைக்கரண்டி அளவை பயன்படுத்தினால், நமது அறுவடை நேரம் வரும்பொழுது மேஜைக் கரண்டி அளவுதான் பயன்படுத்தப்படும். நாம் ஒரு பெரிய பீப்பாய் அளவை பயன்படுத்தினால், பீப்பாய் அளவுதான் நமக்கு திரும்ப கொண்டுவரப்படும்.

### *கொடுப்பதில் வெவ்வேறு விசுவாச நிலைகள்*

சிலவேளைகளில் ஒரு லட்சம் ரூபாய்க்கான விசுவாசத்தை ஒரு நபர் பயிற்றுவிக்கும் போது, ஒரு லட்சம் ரூபாயை பெற்றுக்கொள்ள அவருடைய விசுவாச நிலை அங்கு இருப்பதில்லை. ஒரு ரூபாய் அளவுகளிலேதான் பெற்றுக்கொள்ள அவரால் முடியலாம். ஒரு ரூபாய் அளவுகளிலே ஒரு லட்சம் ரூபாயை பெற்றுக்கொள்ள நீண்ட நேரமாகும். ஒரு நபர் எந்த அளவுகளை பயன்படுத்துகிறாரோ அந்த அளவுகளின் மடங்குகளில் பொதுவாக அவர் பணத்தொகையை பெற்றுக்கொள்வார். அவர் பத்துரூபாய் அளவுகளில் கொடுத்தால், அவர் பத்துரூபாய் அளவுகளில் அறுவடையைப் பெற்றுக்கொள்வார், ஒரே நேரத்தில் பத்தாயிரம் ரூபாய் அல்லது லட்சம் ரூபாயை பெற்றுக்கொள்ளமாட்டார்.

கொடுப்பதற்கு நாம் உபயோகிக்கும் அதே விசுவாசத்தைத்தான், பெற்றுக்கொள்வதற்கும் நாம் உபயோகிக்கிறோம். பத்துரூபாய்கள் மட்டும்தான் கொடுக்க நமக்கு விசுவாசமிருக்கு மானால், பத்து ரூபாய்கள் அளவுகளிலே மட்டும்தான் பெற்றுக்கொள்ள நமக்கு விசுவாசம் இருக்கும். ஒரு லட்சம் ரூபாய் கொடுக்க நமக்கு விசுவாசம் இருக்கும்பொழுதுதான், ஒரு லட்சம் ரூபாய் அளவுகளில் பெற்றுக்கொள்ள நமக்கு விசுவாசமிருக்கும். பத்தாயிரம் ரூபாயை கொடுப்பது என்றால் இன்னதென்றே தெரியாத சில மக்கள், ஒரு லட்சம் ரூபாய்க்கான விசுவாசத்தை உபயோகிக்க முயற்சி செய்கின்றனர். சில காரியங்களில் குழப்பம் அங்கிருக்கிறது. அவர்கள் தங்களுடைய விசுவாச நிலையை பொறுத்து செயல்பட வில்லை.

இந்தக் காரணத்தினால், அநேகர் சரியான நிலையில் கொடுக்கும் பிரமாணத்தை அப்பியாசிக்க கற்றுக்கொள்ளவில்லை. எனவே அதிக ஏமாற்றங்களை அனுபவிக்கின்றனர். தனது விசுவாச நிலைக்கு அப்பாற்பட்டு ஒரு நபர் செயல்படும் ஒவ்வொரு நேரத்திலும், அவரது மனசாட்சி அவரை எச்சரிக்கும். நமது மனசாட்சியின் வழிகாட்டுதலின்படியே, நமது விசுவாசத்தை உபயோகிக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால், நிதி கப்பற்சேதத்தில் நாம் முடிவடைவோம் (1 தீமோ. 1:19).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

### *கொடுப்பதில் வளர்ச்சியடைதல்*

கொடுப்பதில் வளருவதென்பது விசுவாசத்தில் வளருவதற்கு ஒத்ததே. பெரிய பெரிய பணத்தொகையை கையாளுவதற்கு நமது விசுவாச தசைகள் நன்கு வளர்ச்சி அடையும் வரையில், ஒவ்வொரு நேரத்திலும் கொஞ்சம் கொஞ்சமாக நாம் கொடுப்பதில் பெருகும்படிக்கு, நமது விசுவாசத்தை நாம் உபயோகிக்க வேண்டும். நீங்கள் பெற்றுக்கொள்ளும் பணத் தொகை, கொடுப்பதற்கு உங்கள் விசுவாச தசைகளின் பருமனை பொருத்தே நிர்ணயிக்கப் படுகிறதென்பதை எப்பொழுதும் நினைவிற்கொள்ளுங்கள்.

தங்களைத்தாங்களே அளவுக்கு அதிகமாக இழுத்துக்கொள்வதினால், சில நேரங்களில் கிறிஸ்தவர்கள் இழுக்கப்பட்ட விசுவாச தசையை அனுபவத்திருக்கிறார்கள். அவர்கள் விசுவாசத்தில் வளருவதற்கு பதிலாக, விசுவாசத்தில் தாண்டிச் செல்ல முயற்சி செய்கிறார்கள். தியானத்தின் மூலமாகவும் தேவ வார்த்தையில் செயல்படுவதாலும் விசுவாசம் வளருவதற்கு நேரமெடுக்கிறது. காணிக்கை கொடுப்பதின் பிரமாணத்தோடு சேமிக்கும் பிரமாணத்தையும் சேர்த்து அப்பியாசிப்பதினால் நிதிக்காக விசுவாசத்தை உபயோகிப்பதின் மூலம், நாம் கொடுக்கும் அளவை பெருகச்செய்ய முடியும் (அது நாம் பெற்றுக்கொள்ளும் அளவையும் பெருகச்செய்யும்).

### *சேமிப்பின் பிரமாணம்*

எனது விசுவாச நடையை முதலாவது நான் ஆரம்பித்தபோது, எனக்கு ஒரு களஞ்சியம் அவசியம் என்பதை பரிசுத்த ஆவியானவர் எனக்கு காண்பிக்கும் வரைக்கும், சேமிக்கும் பிரமாணத்தை அறியாமலிருந்தேன். நமது களஞ்சியங்களில் அவர் ஆசீர்வாதத்தை கட்டளையிடுவதாக தேவன் சொன்னது உபாகமம் இருபத்தெட்டாம் அதிகாரத்தில் உள்ளது (உபா. 28:8). இங்குள்ள களஞ்சியங்கள் மல்கியாவிலுள்ள தேவனது பண்டக சாலையை குறிப்பதில்லை. ஆனால், இஸ்ரவேலர்கள் பொருட்களையும், அறுவடையையும், சாமான்களையும் சேமித்துவைக்க பயன்படும் கட்டடங்களையுமே குறிக்கும். இஸ்ரவேல் ஜனங்கள் சேமிக்கும் கொள்கைகளை கற்றுக்கொள்ள தேவன் எதிர்பார்த்தார்.

விசுவாசத்தில் நடப்பதென்பது சேமிப்பே இல்லாமல், வரவிற்கும் செலவிற்கும் வாழ்வது தான் என்று சில கிறிஸ்தவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். அவர்களது கூலியோ அல்லது நிதியோ ஒரு வாரம் தாமதிக்குமானால், அவர்கள் பட்டினிகிடக்க வேண்டும் அல்லது கடனுக்குள் சென்றுவிடுவார்கள். எனினும் யாரிடத்தில் கடன் வாங்குகிறார்களோ அவர்களுக்கு சேமிப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட நேரங்களிலே, சேமித்து வைத்திருக் கிறவர்கள் கடன்கொடுக்கிறவர்களாகவும், அப்படியில்லாதவர்கள் கடனாளிகளாகவும் மாறுகின்றனர்.

அநேகர் வரும் நாட்களில் செலவழிப்பதற்காக சேமிக்கிறார்கள் அல்லது மழைக்காலத்திற் காக சேமிக்கிறார்கள். எனினும், நிலைநிற்கும் வல்லமைக்காகவும், கடன்கொடுக்கும் வல்லமைக்காகவும், கொடுக்கும் வல்லமைக்காகவும் விசுவாச மனிதன் சேமிக்கிறார். ஜான் ஸ்மித் என்னும் பேருள்ள ஒரு நபர் ஆயிரம் ரூபாய் சம்பாதித்து, நூறு ரூபாய் சேமிப்பார் என்றால், அவருக்கு அந்த வருடத்தின் முடிவில் ஆயிரத்து இருநூறு ரூபாய் இருக்கும். ஜான் ஸ்மித் இருநூறு ரூபாய் கொடுப்பதாக நாம் வைத்துக் கொண்டால் (பத்து சதவீதம் தசமபாகமும் பத்து சதவீதம் காணிக்கை கொடுத்தலும்). ஜான் ஸ்மித் செயலாற்றி வந்த அளவு இருநூறு ரூபாய் அளவாகும்.

அந்த வருடத்தின் முடிவில் ஒரு நல்ல நாளன்று, ஒரு மிஷனரி பட்டணத்திற்கு வந்தார், அந்த மிஷனரிக்கு ஒரு காணிக்கை சேகரித்தார்கள். ஜான் ஸ்மித் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டபோது, ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி தேவன் அவரோடு பேசினார். ஜான்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

ஸ்மித் கீழ்ப்படிந்து தன் வாழ்வில் முதல் முறையாக ஆயிரம் ரூபாய் கொடுத்தார். ஒரு சிறிது நேரத்தில், ஜான் ஸ்மித் ஆயிரம் ரூபாய் அளவில் செயல்பட ஆரம்பித்தார்.

எந்த அளவினால் நாம் அளக்கிறோமோ அதே அளவினால் நமக்கு திரும்ப அளக்கப் படும் என்று இயேசு சொன்னார் (லூக். 6:38). ஜான் ஸ்மித் இப்பொழுது ஆயிரம் ரூபாய் அளவுகளில் பண ஆசீர்வாதங்கள் தனக்கு வரும்படி எதிர்பார்க்க முடியும். கொடுப்பதில் அவரது விசுவாசத்தை உபயோகித்து, வளரும் திறமையை அவருக்கு சேமிப்பின் பிரமாணம் கொடுத்துள்ளது. இவைகள் எல்லாவற்றிலும் அவரது காசோலை ஒரு வாரம் தாமதித்தாலும் ஜான் ஸ்மித் எந்த பிரச்சனையும் இல்லை. அவரது சேமிப்பை அவர் பயன்படுத்திக் கொள்ள முடியும் (மற்றவர்களிடமிருந்து கடன் வாங்குவதற்கு பதிலாக) அவரது காசோலை பணமாக்கப்படும்பொழுது பிறகு அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளலாம்.

தேவன் உங்களது களஞ்சியத்தை ஆசீர்வதிக்க விரும்புகிறார் (உபா. 28:8). உங்களுக்கு களஞ்சியம் இல்லாவிட்டால், இந்த வாக்குத்தத்தத்தை உங்களால் உரிமை கொண்டாட முடியாது. பணம்தான் முக்கியமான பண்டமாற்று பொருளாக இப்பொழுது இருப்பதால், நமது களஞ்சியங்கள், வங்கியிலுள்ள சேமிப்பு கணக்கினால் குறிக்கப்படுகிறது. தங்களது வருமானத்தின் எழுபது சதவீதத்தில் வாழ்வது கிறிஸ்தவர்களுக்கு தகுதியான ஒன்றாகும். மீதமுள்ள முப்பது சதவீதத்தில், இருபது சதவீதத்தை தேவ ஊழியத்திற்கு அவர்கள் கொடுக்க முடியும் (பத்து சதவீதம் தசமபாகம் பத்து சதவீதம் காணிக்கை) மற்ற பத்து சதவீதத்தை தங்களுடைய சேமிப்புக்காக வைத்துக்கொள்ளலாம்.

அவர்களுடைய விசுவாச நிலை உயர்ந்து பெருகும்போது, தங்கள் வருமானத்தில் முப்பது சதவீதம், பிறகு நாற்பது, பின்பு ஐம்பது என்று கிறிஸ்தவர்கள் கொடுக்க முடியும். சில கிறிஸ்தவர்கள் தங்கள் வருமானத்தில் தொண்ணூறு சதவீதம் வரை கொடுத்திருக்கிறார்கள். லட்சாதிபதிகளான மற்றவர்கள் தங்கள் வருமானத்தில் நூறு சதவீதம் ஆண்டவருக்கும் கொடுத்திருக்கிறார்கள். அவ்விதமாக செய்கிறவர்கள் எல்லாருக்கும் மிகப்பெரிய நித்திய பொக்கிஷங்கள் பரலோகத்தில் இருக்கும் என்று இயேசு சொன்னார் (மத். 6:20; மாற். 10:21). பிற்காலத்தில் அப்போஸ்தலனாகிய பர்னபா ஐஸ்வரியனாயிருந்தான். ஆதித்திருச்சபையின் வேலைக்கு கொடுத்த முக்கியமானவர்களில் அவரும் ஒருவாரய் இருந்தார் (அப். 4:36, 37).

### *கொடுப்பதில் சரியான மனப்பான்மைகள்*

எவ்வளவு சரியாக நமது பணத்தை கையாளுகிறோம் என்பதில் தேவன் அதிகபடியான விருப்பம் உள்ளவராயிருக்கிறார். அவருடைய ஊழியத்தில், ஜனங்கள் எவ்விதமாக தங்கள் காணிக் கைகளை கொடுக்கிறார்கள் என்று பார்க்க இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிரே தானே உட்காரவும் செய்தார் (மத். 12:41). எவ்விதமாக கொடுத்தார்கள் மற்றும் என்ன கொடுத்தார்கள் என்பதில் அவர் விருப்பமுள்ளவராயிருந்தார். சதவீதப்படி ஏழைகளைக் காட்டிலும் பணக்காரர்கள் குறைவாகக் கொடுத்தார்கள். இரண்டு காசுகொடுத்த அந்தப் பெண்மணி தனது பணத்தில் நூறு சதவீதத்தையும் கொடுத்துவிட்டாள் (மாற். 12:44). இயேசுவின் கணிப்பின்படி அவள் அதிகமாக கொடுத்தாள் (மாற். 12:43).

காணிக்கையாக நாம் கொண்டுவரும் பணத்தொகையின்படி தேவன் நமது கொடுத்தலை நியாயந்தீர்க்காமல், நமது வருமானத்திற்கு சம்மந்தமாக நமது காணிக்கையின் சதவீதப்படியே நம்மை நியாயந்தீர்க்கிறார். நாம் எதற்காக கொடுக்கிறோம் என்ற நமது நோக்கமும், எப்படி நாம் கொடுக்கிறோம் என்பதும் தேவனுக்கு முக்கியமானவைகளே. மனவெறுப்போடோ அல்லது தேவையினிமித்தமோ நாம் கொடுக்கக் கூடாது (2 கொரி. 9:7). மன வெறுப்போடு கொடுப்பதென்பது விருப்பமில்லாமல் கொடுப்பதும், பல நேரங்களில் பெரிய குறைசொல்லுதலோடும்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

கொடுப்பதுமாகும். மல்கியா தீர்க்கதரிசியின் ஜனங்கள் ஏன் ஆசீர்வதிக்கப்படவில்லை என்பதன் காரணங்களில் ஒன்று, தசமபாகத்தையும் காணிக்கையையும் குறித்து தேவனுக்கு விரோதமாக அவர்களது முறுமுறுப்புகளும் ஆகும் (மல். 3:13, 14).

கொடுக்கும்போது சிலர் குறைசொல்வதுமில்லை. ஆனால், அவர்களது தேவைகளின் நிமித்தமாகவே அவர்கள் கொடுக்கிறார்கள். ஒரு ஊழியர் பணத்திற்காக மக்களிடம் பேசும்பொழுது, தங்கள் தேவைகளை விளம்பரப்படுத்தி, தங்களது ஊழியம் மூடப்பட்டுவிடும் சூழ்நிலையால் நிதிக்காக அழைப்புக் கொடுக்கிறார்கள். இந்த அத்தியாவசிய நோக்கில் கொடுப்பவர்கள், தங்களுடைய ஈகையால் அந்த ஊழியத்தை பாதுகாக்கும் கதாநாயகர்களாக செயல்படுகிறார்கள். அப்படி கொடுப்பது பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலால் உந்தப்படுவதில்லை. பரிதாபத்தினாலும் சுய மகிமையின் உணர்வோடும் உந்தப்படுவதே.

எல்லா காரியங்களுக்கும் முன்னதாக, ஏன் அந்த ஊழியம் நிதி நெருக்கடியில் இருக்கிறது என்று நாம் கண்டுபிடிக்க வேண்டும். ஒரு ஊழியம் பணப்பிரச்சனைக்குள் சென்று மீட்கப்பட வேண்டிய நிலையிலிருந்தால், அந்நிலைக்கு அது வர ஏதோ குழப்பமிருக்க வேண்டும். அது எதுவானாலும், அது சீர்திருத்தப்பட வேண்டும். மாறாக, நிதி நெருக்கடியை உண்டாக்கும் செயல்முறைகளையும் நடைமுறைகளையும் தொடர்ந்து செய்யும் ஊழியங்களுக்கு மக்கள் ஆதரவளிக்கிறார்கள். இது ஒழுகும் பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றுவதைப் போன்றதாகும். ஒழுகுவதை முதலில் சீர்படுத்தி, பிறகு தண்ணீர் ஊற்ற வேண்டும். சரியான காரியத்தை ஒரு ஊழியம் செய்யுமானால், முதலாவதாக அது பொருளாதார பிரச்சனைகளில் இருக்காது.

இரண்டாவதாக, ஒரு ஊழியர் பணத்திற்காக மற்றவர்களை இரந்து, மன்றாடி, கெஞ்சும் நிலையை அடைவாரென்றால், அநேகமாக அவர் தேவனோடு பரஸ்பரம் பேசும் சுமூக நிலையில் இல்லை. தேவன் உண்மையானவராகவும், நமது தேவைகளை சந்திப்பவராகவும் இருந்தால், நவீன மக்கள்திரள் விற்பனை உபாயங்களை பயன்படுத்தாமல் நாம் அவரிடமே பேசலாம். ஒரு ஊழியம் தொடர்ந்து நிலைத்திருக்க இரந்து கெஞ்சி பணத்திற்கு பரிதாபமான அவர்களது கூக்குரலுக்கு நாம் பிரதிபதிலளிக்காததினால் மூடப்படும் அபாய நிலையிலிருந்தால், நாம் மென்மையாக உறுதியாயிருந்து அது மூடப்பட அனுமதிக்க வேண்டும் (எந்த ஊழியமும் மூடப்பட நாம் விரும்பாததற்கு அதிகமாய்). இப்படிப்பட்ட தேவ பிரதிநிதிகளால் தேவ நாமம், தேவ சாயல், மற்றும் தேவ மகிமை களங்கமடைய நாம் அனுமதிக்காதிருப்போமாக.

தேவையினிமித்தமாக நாம் உந்தப்பட்டுக் கொடுப்பதற்கு பதிலாக, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலினால் உந்தப்பட்டு கொடுக்க வேண்டும். பணத்திற்காக அதிக சத்தம்போட்டு கத்துகிறவர்களுக்கு நமது காணிக்கைகளை கொடுக்க நாம் தீர்மானிக்கக் கூடாது. தேவையின் அடிப்படையில் நாம் கொடுக்கும்படி தேவையுள்ள ஊழியங்களுக்கு கொடுக்கவும் நாம் தீர்மானிக்கக் கூடாது. எங்கு நமது ஆவிக்குரிய ஆகாரத்தைப் பெற்றுக்கொள்கிறோமோ அங்கு நமது காணிக்கையை கொடுக்க நாம் தீர்மானிக்க வேண்டும்.

நமது காணிக்கைகளை கொடுப்பது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியின் நேரமாயிருக்க வேண்டும். மிகப்பெரிய எதிர்பார்ப்போடு விதைக்கும் ஒரு விவசாயியைப்போல் நாம் இருக்க வேண்டும் (2 கொரி. 9:6). நாம் உற்சாகமாய்க் கொடுக்கிறவர்களாய் இருக்க வேண்டும் (2 கொரி. 9:7). இருதயத்தின் சரியான மனப்பான்மையில் கொடுக்கப்படும் நமது காணிக்கை, தேவ சிங்காசனத்திற்கே எட்டும் சுகந்த தூபத்தை உருவாக்குகிறது (பிலி. 4:18). நமது சரீர காணிக்கையானது அவரது பாத்திரங்கள் மூலமாக தேவ வேலை தொடர்ந்து விரிவாக்கப்படுவதை உறுதி செய்வதோடல்லாமல், தேவனுக்கு மிகவும் பிரியமான ஆவிக்குரிய காணிக்கையாக ஆவி மண்டலத்திலும் நுழைகிறது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# *அத்தியாயம் 4*

# ஆவிக்குரிய கூட்டாண்மையின் விதிகள்

இரண்டு வகையான ஆவிக்குரிய கூட்டாண்மைகள் உள்ளன. ஒன்று தேவனோடும், மற்றது தேவன் நியமித்துள்ள ஊழியங்களோடும். தேவனோடுள்ள கூட்டாண்மை, முதற் கனிகளின் பிரமாணம் என்று அழைக்கப்படும். பழைய ஏற்பாட்டில், பொதுவாக அறுவடை காலத்தின் ஆரம்பத்தில் இஸ்ரவேலர்கள் முதலாவது பெறும் அறுவடையே முதற்கனிகளாகும். முதற்கனிகளைக் கொடுத்தல், முதற்கனிகளின் பண்டிகையோடு சேர்ந்து வரும்.

### *முதற்கனிகளின் பிரமாணம்*

யோசுவா கானான் தேசத்தை கைப்பற்றினபொழுது, எல்லா வெள்ளியும் பொன்னும், வெண்கலத்தினாலும் இரும்பினாலும் செய்த பாத்திரங்களும் கர்த்தருடைய ஆலயப் பொக்கிஷத்தில் சேரும் என்று தேவன் அறிவுறுத்தினார் (யோசு. 6:24). அது முதற்கனிகளின் ஒரு வகையாகும். ஆகான் கீழ்படியாமற்போனபோது, இஸ்ரவேலர் மேல் நியாயத்தீர்ப்பு வந்தது (யோசு. 7:11, 12). அடுத்த பட்டணத்தில் கொள்ளையை எடுத்துக்கொள்ள தேவன் அனுமதித்தார் (யோசு. 8:27). கானான் வெற்றியின் முடிவில், கொள்ளையோடுள்ள தேசம் முழுவதும் இஸ்ரவேலருக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

முதற்கனிகள் முதலாவது இஸ்ரவேலரது கொள்ளையில் நூறு சதவீதமாகும். ஆனால், அவர்கள் இருபது பட்டணங்களை ஜெயித்திருந்தால் அவர்களது கொள்ளையில் அது ஐந்து சதவீதம் மட்டுமே. ஐம்பது பட்டணங்களை ஜெயித்திருந்தால், அவர்களது மொத்த கொள்ளையில் இரண்டு சதவீதமாகவே இருக்கும்.

தேவன் நமது மூத்த பங்காளர் என்று நாம் அங்கீகரிப்பதன் ஒரு சொல்வடிவமே முதற்கனி காணிக்கையாகும். முதல் அறுவடையை நமக்கு கொடுத்த தேவனே, நமக்கு வரவேண்டிய அறுவடையை முழுமையாக அறுவடை செய்ய உதவுவார் என்ற தைரிய நம்பிக்கையை உறுதியாக கூறுவதாகும். வந்து கொண்டிருக்கும் எதிர்பார்க்கப்பட்ட அறுவடைக்காக விசுவாசத்தில் நன்றி சொல்வதுமாகும்.

ஒரு புதிய ஊழியத்தை நான் ஆரம்பித்த ஒவ்வொரு நிலையிலும், முதற்கனிகளை ஆண்டவருக்கு காணிக்கையாக கொண்டு வந்திருக்கிறேன். அந்த புதிய ஊழியத்தின் மூலமாக இனிமேல் பெற்றுக்கொள்ளும்படி நான் எதிர்பார்த்த ஆசீர்வாதங்களின் எல்லா தசமபாகங்களையும் காணிக்கைகள் இவைகள் தவிர முதற்கனி காணிக்கையையும் கொடுத்தேன். எனது எல்லா முயற்சிகளிலும் தேவனே எனது மூத்த பங்காளர் என்று நான் ஏற்றுக்கொண்டு அங்கீகரித்ததை வெளிப்படையாக நான் சொல்வதாகவே முதற்கனி காணிக்கை மாறினது.

### *தேவனோடு கூட்டாண்மை*

தேவன் நமது கம்பெனிக்கோ, ஊழியத்திற்கோ மூத்த பங்காளராக இருக்க நாம் விரும்பினால், ஒட்டுமொத்த வருமானத்தில் அவருக்கு தவறாமல் தசமபாகத்தையும் காணிக்கையையும் கொடுக்க அவரோடு ஒரு உடன்படிக்கையையும் பண்ணிக்கொள்ள வேண்டும். மொத்த வருமானத்தில் இருபது சதவீதத்தை கொடுக்க இலக்காக எனது ஊழியம் வைத்திருக்கிறது. தேவ கிருபையால் நாங்கள் எப்பொழுதுமே அதிகமாக கொடுக்க முடிந்திருக்கிறது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

தேவனோடு கூட்டாண்மை என்பது அவரையும் நிர்வாக தலைமைத்துவ கூட்டத்தில் சேர்த்துக்கொள்வதை உள்ளடிக்கியது. அவர் என்ன சொல்கிறார் என்பதை கவனிக்க வேண்டும். உபாகமம் இருபத்தெட்டாம் அதிகாரத்தின் வாக்குத்தத்தம், நமது தேவனாகிய கர்த்தரின் சத்தத்திற்கு நாம் கருத்தாய் கீழ்படியும் நிபந்தனையையும் கூட உள்ளடக்கியது (உபா. 28:1). தேவனோடு உள்ள எல்லா நிர்வாக தலைமைத்துவ கூட்டங்களும், ஜெபக் கூட்டங்கள்தான் என்பதையும் முக்கியமாக கவனிக்க வேண்டும். அவர் மூத்த பங்காளராய் இருப்பதால், அந்த கூட்டாண்மையின் ஆலோசனைகளும் கொள்கைகளும் அவரிடமிருந்தே வரவேண்டும்.

*தேவனுடைய ஊழியங்களோடு கூட்டாண்மை*

அநேகர் மனம் போன போக்கில் தங்களது தசமபாகங்களையும் காணிக்கைகளையும் கொடுக்கிறார்கள். திட்டமிட்டுக் கொடுப்பதை அவர்கள் அப்பியாசிப்பதில்லை. மனம்போன போக்கில் அவர்கள் கொடுப்பதால், அவர்களது ஆசீர்வாதங்களும் வருமானங்களும் அப்படித்தான் இருக்கின்றன. சிலநேரங்களில் அதிக சத்தமாய் வேண்டுகோள் விடுக்கும் ஊழியத்திற்கு அவர்கள் கொடுப்பார்கள். பரிசுத்த ஆவியானவரால் அல்ல, தங்களது உணர்ச்சிகளாலேயே உந்தப்படுகின்றனர். தங்களது இருதயங்களிலுள்ள நோக்கங்களுக்காக கொடுக்காமல், தேவைகளுக்காகவே கொடுக்கின்றனர் (2 கொரி. 9:7).

தாறுமாறாக இல்லாமல், நாம் கொடுப்பது நோக்கம் நிறைந்ததாயிருக்க வேண்டும். நோக்கம் நிறைந்து கொடுப்பதென்பது, உணர்ச்சிகளினாலல்ல சித்தத்தினால் உந்தப்பட்டுக் கொடுப்பதே. முந்தின அத்தியாயத்தில் சொன்னதுபோலவே, நமக்கு ஆவிக்குரிய ஆகாரத்தை அருளும் ஊழியங்களுக்கு நமது தசமபாகங்களையும் காணிக்கைகளையும் கொடுக்க வேண்டும். அந்த ஊழியங்களுக்கு கிரமமாகவும் ஒழுங்கான முறையிலும் எவ்வளவு விதைக்க வேண்டும் என்று ஜெபம்பண்ணி ஆண்டவரிடம் கேட்க வேண்டும். தேவன் நம்மோடு பேசுகிறபடியே, கிரமமான மாதாந்திர அல்லது வார வரவு செலவு திட்டத்தின்படி நாம் கொடுப்பதை தீர்மானிக்க வேண்டும்.

நாம் கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் கலந்து கொள்ளும்போது, சில நேரங்களில் கொடுப்பதற்கு அதிகப்படியான வாய்ப்புகள் கிடைக்கும். அப்படிப்பட்ட நேரங்களில் நமது வாழ்வில் ஒழுங்காகவும் கிரமமாகவும் வசனத்தை விதைப்பவர்களுக்கு நாம் கிரமமாகவும் ஒழுங்காகவும் கொடுப்பதில் கைவைக்கக் கூடாது. ஒழுங்காகவும் கிரமமாகவும் கொடுக்கும் படி திட்டமிட்டதற்கு மேலாகவும் அதிகமாகவும் கொடுக்கும்படி நாட வேண்டும்.

ஆவிக்குரிய நிலையில் ஒழுங்காகவும் கிரமமாகவும் நம்மை போஷிக்கும் ஊழியங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கொடுத்தலானது, அவர்களோடு ஆவிக்குரிய கூட்டாண்மையில் நுழைவதாகும். இப்படிப்பட்ட கொடுத்தலின் ஆசீர்வாதமும் வரவும், மனம்போன போக்கில் கொடுப்பதற்கு மேலாகவும் அப்பாற்பட்டதாகவும் இருக்கிறது. மனம்போன போக்கில் கொடுப்பதில், கொடுப்பதற்கு முன் தீர்மானிக்கப்பட்ட தொகை இருந்தாலும், விதைப்பதற்கு முன் தீர்மானிக்கப்பட்ட இடம் இருக்காது (சில நேரங்களில், மனம்போன போக்கில் கொடுப் பதற்கு முன்தீர்மானிக்கப்பட்ட தொகையும் இருக்காது). கூட்டாண்மை வகை கொடுத்தலுக்கு கொடுக்கும்படி முன் தீர்மானிக்கப்பட்ட தொகையும், முன் தீர்மானிக்கப்பட்ட விதைக்கும் இடமும் ஆகிய இரண்டும் உள்ளது.

தொடர்ந்து ஒரு இடம் விட்டு இன்னொரு இடம் சென்று தனது விதையை விதைக்கும் விவசாயி, தனது பயிரை பராமரிக்கவோ, இயற்கையிலுள்ள பூச்சிகளிலிருந்தும் அவைகளை பாதுகாக்கவோ அவரால் இயலாது. எனினும், அந்த விவசாயி ஒரு நல்ல நிலத்தை கண்டுபிடித்தால், நிலத்தை பண்படுத்தி, விதையை விதைத்து, ஒழுங்காக நிலத்திற்கு

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

தண்ணீர் பாய்ச்சி, களை எடுத்து, புழுக்களும் பறவைகளும் பயிரை அழிக்காதபடி பாதுகாத்து இருப்பாரானால், நிச்சயமாகவே நல்ல அறுவடை கிடைக்கும். அவருடைய நிலங்கள் அதிகமாக சிதறியிருக்குமானால், செய்ய வேண்டிய இப்படிப்பட்ட இந்த ஒழுக்கும் கிரமமுமான வேலைகளை அவரால் செய்ய முடியாது.

### *கொடுப்பதிலும் பெற்றுக்கொள்வதிலும் கூட்டாண்மை*

பவுல் பிலிப்பியருக்கு எழுதிய தனது நிருபத்தில், அவர் மக்கெதோனியாவிற்கும் தெசலோனிக்கேயாவிற்கும் சென்றபோது, அவர்கள் தனது ஊழியத்தை தாங்கி உதவியதை குறித்து பேசுகிறார் (பிலி. 4:15, 16). அவர்கள் அவருடைய ஊழியத்தில் பங்காளிகளாய் இருந்தார்கள். மொழிபெயர்ப்பிலே ஆம்லிபைடு வெர்ஷன் இன்னும் அதிகமாக விளக்கிச் செல்கிறது.

“பிலிப்பியரே, சுவிசேஷத்தின் ஆரம்ப நாட்களிலே நான் மக்கெதோனியாவிலுருந்து புறப்பட்டபோது, பற்று வரவு கணக்கை ஆரம்பித்து என்னோடு கூட்டாண்மை வைத்துக் கொண்ட காரியத்தில் நீங்கள் மாத்திரம் என்கு உடன்பட்டதேயல்லாமல் வேறொரு சபையும் கொடுக்கல் வாங்கல் காரியத்தில் உடன்படவில்லை என்று நீங்கள் நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்.” – பிலிப்பியர் 4:15

ஒரு கூட்டாண்மை என்பது வெறும் ஒரு வழி தீர்மான முன்மொழிதல் அல்ல. இது சம்மந்தப்பட்ட இருதரப்பார்களுக்கும் நன்மை பயக்கும். பவுல்தான் காணிக்கைகளை பெற்றுக்கொண்டவர். எனினும் பிலிப்பியர்கள் கொடுக்கல் வாங்களில் பங்காளிகளாய் இருப்பதைப் பற்றி பவுல் பேசுகிறார் (பில். 4:15). பிலிப்பியர் பெற்றுக்கொண்ட நன்மைகள் பின்வருமாறு:

1. அவர்கள் கணக்கிற்கு பலன் பெருகுகிறது (பிலி. 4:17).
   தனது ஊழியத்தினால் ஆதாயமாக்கப்பட்ட ஆத்துமாக்களின் பலனைப் பற்றியே பவுல் இங்கு குறிப்பிடுவதாக நான் விசுவாசிக்கிறேன். பவுலினுடைய ஊழியத்தில் பங்களி களானதினால், அவன் ஊழியத்தின் மூலமாக ஆதாயமாக்கப்பட்ட ஆத்துமாக்களுக்கு, மறைமுகமாக பிலிப்பியர்களும் பொறுப்பளிகளானார்கள். அவர்கள் அவரது ஊழியத்தை உதவி செய்து தாங்கியதால், பவுலின் ஊழியத்தினுடைய எல்லா பலனும் மறைமுகமாக அவர்களுடைய பலனாகிறது. அவர்கள் அவரது ஊழியத்தின் பங்கானதால், விசுவாசி களின் நியாயத்தீர்ப்பில், பவுலோடு சேர்ந்து பிலிப்பியர்களும் பலனளிக்கப்படுவார்கள். அவர்களது பரலோக கணக்கில் பலன் பெருகுகிறது.

2. பவுலுக்கு அவர்கள் கொண்டுவந்த காணிக்கை, ஆண்டவருக்கு ஆராதனையின் சுகந்த வாசனையின் தூபமாக இருந்தது (பிலி. 4:18).
   ஆண்டவருக்கு பாட்டு பாடுவதைப் போலவே, அது ஆராதனையின் ஒரு செயலாக இருந்தது.

3. இயேசுகிறிஸ்துவிலுள்ள மகிமையின் அவருடைய ஐசுவரியத்தின்படியே, தேவன் அவர்களது தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்து நிரப்புவார் (பிலி. 4:19).
   பழக்கப்பட்ட இந்த வசனம் நிஜமாகவே நிபந்தனையான வாக்குத்தத்தம். பிலிப்பியர் நான்காம் அதிகாரம் பதினைந்தாம் வசனம் முதல் பதினேழாம் வசனம் வரையில் செய்யப்பட்டதன்மேல் அது நிபந்தனையாய் உள்ளது. எல்லா நிபந்தனைகளையும் நிறை வேற்றினதால், பவுல் பிலிப்பியர்கள் மேல் ஆசீர்வாதத்தைக் கூறி தொடர்வதுதான், ‘என் தேவன் உங்களது தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்து நிரப்புவார்...’

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

## *நூறுமடங்கு ஆசீர்வாதம்*

ஒரு காணிக்கையை விதைக்கும்போது ஒவ்வொரு முறையும் தங்களது காணிக்கையின் நூறுமடங்கு வரவை உரிமை பாராட்டுபவர்கள் அநேகர். வாஸ்தவத்தில் நூறுமடங்கு வரவை பெற்றுக்கொள்ளுகிறவர்கள் அரிதாயிருக்கிறார்கள். நூறுமடங்கின் சாத்திய மில்லாமை பிரச்சனையல்ல, ஆனால் நூறுமடங்கின் வாக்குத்தத்தம், நிபந்தனையின் வாக்குத்தத்தமாயிருக்கிறது.

என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் எல்லாவற்றையும் விட்டவர்களே, இந்த வாழ்வில் நூறுமடங்கு வரவை பெறுவார்களென்று இயேசு சொன்னார் (மாற். 10:29, 30). எல்லாவற்றையும் பின்னே விட்டுவிடுவதென்பது, குடும்பத்தின் நமது பொறுப்புகளை விட்டு விடுவதோ அலட்சியம் செய்வதோ என்று அர்த்தமல்ல. தங்கள் குடும்பத்தை விசாரிக்கும் பொறுப்பை விட்டுவிடுகிறவர்கள் அவிசுவாசியிலும் கெட்டவர்களாயிருப்பார்கள் (1 தீமோ. 5:8). வேலை செய்யாதவர்கள் (வேலையிலோ ஊழியத்திலோ) சாப்பிடவுங்கூடாது (2 தெச. 3:10).

வாழ்வு மற்றும் இருதயத்தின் முழு பரிசுத்தமாகுதலை பற்றி இயேசு பேசினார். இந்த உலகத்திலுள்ள யாரைக்காட்டிலும் மிகவும் அதிகமாய் அவரையே நேசிக்கும் முழுமையான அன்பைப்பற்றி அவர் சொன்னார். இருதயத்தின் இந்தப் பண்பை ஒரு நபர் பெறும்பொழுது, அவரது காணிக்கையின் பெருக்கம் நூறுமடங்கின் விகிதத்தை எட்டமுடியும். ஆகையால், நமது காணிக்கையின் பெருக்கத்தினுடைய ஆக்கக்கூறு, நமது இருதயங்களை சரணடைய செய்யும் தன்மையின் நேர் விகிதத்திலிருக்கும்.

உங்களுக்கு இந்த பெருக்கத்தின் ஆக்கக்கூறு செயல்பட நீங்கள் விரும்பினால், அடுத்த முறை நீங்கள் காணிக்கை கொடுக்கும்போது, உங்களது இருதயத்தின் சரணடைந்த நிலையை பரிசோதித்து பாருங்கள். இந்த நிபந்தனையை நிறைவேற்றும் எல்லாருக்கும் நூறு மடங்கு வரவு கிடைக்கக் கூடியதாயுள்ளது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## அத்தியாயம் 5

# செழிப்பை கொண்டுவரும் ஆவிக்குரிய கொள்கைகள்

செழிப்பின் விதிகள் மற்ற ஆவிக்குரிய கொள்கைகளோடு சேர்ந்து செயல்பட்டு செழிப்பை கொண்டுவருகிறது. இந்த கொள்கைகள் இல்லாமல், உண்மையில் செழிப்பை நிர்வகிக்க முடியாது. இந்த கொள்கைகளில் முக்கியமான நான்கை நாம் சிறிதளவு காண்போம்.

### *ஞானத்தின் வலிமை*

ஞானமும் செழிப்பும் ஒன்று சேர்ந்தே செல்லும். ஞானத்தின் வலதுகையில் தீர்க்காயுசும் அதன் இடது கையில் செல்வமும் கனமும் இருப்பதாக நீதிமொழிகள் பேசுகிறது (நீதி. 3:16). ஐஸ்வரியமும் கனமும் ஞானத்தோடு சேர்ந்து வரும் சிறிய பயனே. ஞானத்தை சிநேகிக்கிறவர்கள் செல்வத்தை சுதந்தரிப்பார்கள். அவர்கள் களஞ்சியங்கள் நிரம்பும் (நீதி. 8:20). ஞானிகளின் கிரீடம் அவர்களது ஐஸ்வரியமே (நீதி. 14:24).

சாலமோன் இராஜா ஞானத்தைக் கேட்டார், தேவன் ஐஸ்வரியத்தையும் கனத்தையும் சேர்த்து பயனாக அவருக்கு கொடுத்தார் (1 இரா. 3:13). சாலமோன் இராஜா தனது காலத்தில் இருந்த யாரையும்விட மிகுந்த ஐஸ்வரியமுள்ளவனாகவும் மிகுந்த ஞானமுள்ள இராஜா வாகவும் இருந்தார் (1 நாளா. 9:22). அவர் வெள்ளியை கற்களைப்போல அதிகமாக்கின தால், அது ஒரு பொருட்டாக எண்ணப்படவில்லை (2 நாளா. 9:20, 27).

செழிப்பை அனுபவிக்க விரும்பும் ஒவ்வொருவரும், வெள்ளியையும் பொன்னையும் தேடுவதற்கு பதிலாக ஞானத்தை நாடி தேடவேண்டும். ஞானத்தின் ஆவியானவர், செல்வத்தை சேர்க்கும் புத்தியையும், அதை செலவு செய்யும் புத்தி ஆகிய இரண்டையும் கொண்டு வருவார். பூமி ஞானத்தினால் அஸ்திபாரப்பட்டது (நீதி. 3:19). இவ்வாறு, செல்வத்தை சரியான உபயோகத்திற்கு தேவையான எல்லா புத்தியும், மற்றும் இந்த பூமியின் ஆதாரங்கள் எல்லாம் ஞானத்தின் ஆவியானவர் மூலமாக கிடைக்கக் கூடியது. ஞானமே இப்பிரபஞ்சத்தின் பிரதான வலிமையாகும் (நீதி. 4:7).

### *நீதியின் வலிமை*

தேவ பக்தி எல்லாவற்றிற்கும் பிரயோஜனமானது (1 தீமோ. 4:8). தேவ பக்தியாகவும், பரிசுத்தமாகவும், தூய்மையாகவும் தேவனுக்காக வாழ, பெரிய கிரயத்தை செலுத்திய கூற்றை சிலர் வலியுறுத்தியுள்ளார்கள். எனினும், தங்கள் வாழ்வின் பாவத்திற்காகவும், அநீதிக்காகவும் பாடுபடுவதின் ஆரம்பமானது பெரிய கிரயமாகும். எல்லாவற்றிலும், அவ பக்தியாயிருப்பதைக்காட்டிலும் பக்தியாயிருப்பது அதிக பயனுள்ளது. தேவ பக்தி இந்த உலகத்திலும் அடுத்த வாழ்வு ஆகிய இரண்டிற்கும் பயனுள்ளது.

தன் வாழ்நாள் முழுவதிலும், நீதிமான் கைவிடப்பட்டதையும் அப்பமில்லாதிருந்ததையும் தான் காணவில்லை என்பதே தாவீது இராஜாவின் சாட்சியாகும் (சங். 37:25). கர்த்தருக்கு பயப்படுகிற நீதிமானின் வீட்டில் செல்வமும் ஐஸ்வரியமும் இருக்கும் (சங். 112:1–3).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

தற்காலிகமாக அநீதிக்காரன் செழிப்படைவதை நீ பார்த்தால் எரிச்சலடையாதே. பாவியின் ஆஸ்தியோ நீதிமானுக்காக சேர்த்துவைக்கப்படும் (நீதி. 13:22). முடிவிலே, நீதிமான்தான் அதை பயன்படுத்துவான்.

நீதிமான்கள் யார்? இயேசுவை விசுவாசித்து நீதியாகிய ஈவைப் பெற்றுக்கொண்டவர்கள் தான் (ரோம. 5:17). கிறிஸ்துவுக்குள் இருக்கும் நாம் தேவனின் நீதியாக்கப்பட்டுள்ளோம் (2 கொரி. 5:12). நீதியாகிய ஈவைப் பெற்றுக்கொண்டவர்கள் கிறிஸ்துவின் மூலம் வாழ்வில் ஆளுகை செய்வார்கள் (ரோம. 5:17). வாழ்வில் ஆளுவது என்பது இயற்கை மற்றும் ஆவிக்குரிய உலகம் இரண்டிலும் உள்ள வெற்றியையும் குறிக்கும்.

இந்த காரணத்தினால், செழிப்பு என்பது அவருடைய கிருபையின் ஈவாகும் (2 கொரி. 8:7, 9). தேவ கிருபையில் பெருகுகிறவர்கள் (நீதியின் ஈவு) செழிப்பிலும் பெருகுவார்கள் (2 கொரி. 9:8). என் தேவன் இயேசுகிறிஸ்துவிலுள்ள தம்முடைய மகிமையின் ஐஸ்வரியத்தின் படியே உங்கள் தேவைகளையெல்லாம் நிறைவாக்குவார் (பிலி. 4:19). மகிமையில் ஐஸ்வரியங்கள் என்ன என்ற ஆராய்ச்சி, அவைகள் அவருடைய கிருபையின் ஐஸ்வரியங்கள்தான் என்பதை வெளிப்படுத்தும் (எபே. 1:17). மேலும், அவருடைய கிருபையின் ஐஸ்வரியங்கள், ஞானம் புத்தி என்னும் கிறிஸ்துவிலுள்ள சகல ஐஸ்வரியங்களையும் உள்ளடக்கும்.

*மகிழ்ச்சியின் வலிமை*

களிப்புள்ள இருதயம் ஒரு மருந்தைப்போல நன்மை செய்வதோடல்லாமல், களிப்புள்ள இருதயம் உள்ளவர்களுக்கு நித்திய விருந்தாகும் (நீதி. 15:15). அவர்கள் தொடர்ந்து செழிப்பை அனுபவிப்பார்கள். அபரிமிதமான பொருட்களுக்காக, மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் தேவனை சேவியாவிட்டால், வேதனையையும் குறைவையும் அனுபவிப்பார்கள் என்று தேவன் இஸ்ரவேலர்களை எச்சரித்தார் (உபா. 28:47, 48). பிசாசு நமது மகிழ்ச்சியை திருடமுடியாவிட்டால் நமது பொருட்களையும் அவனால் திருடமுடியாது.

மக்கெதோனியா திருச்சபைகள் பொருளாதார கஷ்டங்களை அனுபவித்தாலும், தங்கள் மகிழ்ச்சியை அவர்கள் இழக்கவில்லை (2 கொரி. 8:2). தங்களது தேவைகளின் மத்தியிலும் தாராளமாய் கொடுக்க, அவர்களது மகிழ்ச்சி அவர்களை பெலப்படுத்தினது. தேவன் அவர்களது எல்லா தேவைகளையும் சந்திப்பார் என்று அவர்களுக்கு எழுதினார் (பிலி. 4:19). மக்கெதோனியாவிலிருந்த மிகப்பெரிய பட்டணங்களில் ஒன்றுதான் பிலிப்பி பட்டணம். நமது காணிக்கைகளின் பெருக்கம் நமக்கு திரும்பி வருவதென்பது, களிப்புள்ள இருதயத்தோடு நாம் கொடுப்பதைத் சார்ந்ததுதான் (2 கொரி. 9:7). உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மகிழ்ச்சி என்பது விசுவாசத்தின் இயற்கையான காரணகாரிய வெளிப்படுதலே. விதைப்பின் நேரத்திற்கும் வெளிப்படும் நேரத்திற்கும் இடையே விசுவாசத்தின் சந்தோஷமே பெற்றுக்கொள்ள சரியான மனப்பான்மையில் நம்மை காத்துக் கொள்ளும் (பிலி. 1:25).

*அன்பின் வலிமை*

இஸ்ரவேலர்கள் அவருடைய சத்தத்தை கேட்டு, அவருடைய கற்பனைகளுக்கும் நியமங் களுக்கும் கீழ்ப்படிந்தால், வாலாக்காமல் தலையாவார்கள் என தேவன் இஸ்ரவேலரோடு பேசினார் (உபா. 28:1, 13). இயேசு வந்தபோது எல்லா கற்பனைகளுக்கும் கீழ்படிவது என்பதை, தேவனை முழு இருதயத்தோடும், முழு மனதோடும் முழு சரீரத்தோடும் அன்பு

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

கூர்ந்து, உன்னை நேசிப்பதுபோல உன் அயலானிடத்திலும் அன்பாயிருப்பாயாக என்பதில் தொகையாக சொல்லப்பட்டிருக்கிறது (மாற். 12:39, 13). “உன்னிடத்தில் அன்பாயிருக்கிறதைப்போல பிறனையும் நேசிப்பாயாக” என்பதில் எல்லாக் கட்டளைகளும் அடங்கியுள்ளது என பவுல் சொன்னார்.

தேவ கட்டளைகளை கைக்கொள்வது செழிப்பைக் கொண்டுவருகிறது. தேவ அன்பைக் கைக்கொள்வதுதான் தேவ கட்டளைகளைக் கைக்கொள்வதாகும். எனவே தேவ அன்பை கைக் கொள்வது செழிப்பைக் கொண்டுவருகிறது. அன்பிலே நாம் நடக்காவிட்டால், தேவனிடமிருந்து வரும் செழிப்பை நம்மால் அனுபவிக்க முடியாது. உதாரண குணமுள்ள ஆத்துமா ஐஸ்வரியமாகும் (நீதி. 24:25).

அன்பிலே செல்வத்தை சேகரிக்காதவர்கள், தரித்திரர்பேரில் இறங்குகிறவனுக்காக சேகரிக்கிறார்கள் (நீதி. 28:8). அன்பின் வலிமை திரளான செழிப்பை கொண்டு வரும். மேலும், மலையைப் பேர்க்கத்தக்க விசுவாசம் அன்பின் சூழ்நிலையில்தான் உபயோகப் படுத்தப்பட முடியும் (மாற். 11:23–25). பூரணமாக அன்பில் நடப்பவர்கள்தான் அன்பில் பூரணமாக கொடுக்க முடியும். இவ்வாறு நூறுமடங்கு அறுவடை செய்கிறார்கள்.

செழிப்பு தற்செயலான காரியமல்ல. அது தேவகற்பனைகளை புத்தியாய் கைக் கொள்வதும், ஆவிக்குரிய கொள்கைகளை பொறுமையாய் செயல்முறைப்படுத்துவதுமாகும். பரிபூரண வாழ்விற்கு சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றினால், பரிபூரண வாழ்வு உங்களுடையதாகும். நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன் என்று இயேசு சொன்னார் (யோவா. 10:10).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 